லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-7 டிசம்பர்-2017 மாதஇதழ் விலை ₹ 10/-
makkalvisaranai@facebook twitter



## இந்தியாவின் 6-வது

# உலக அழகி

ஒரு சிறப்புப் பார்வை

# பெறுபவர்களை விட கொடுப்பவர்களே பாக்கியவான்கள்!

**தங்களின் பிறந்த நாள், திருமண நாள், தொழில் தொடங்கிய நாள், முன்னோர்களின் நினைவு நாள், இதர பண்டிகை அல்லது தாங்கள் விரும்பும் நாட்களில்**

# ஆதரவற்ற அன்னையருக்கு அன்னமிட்டு அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவோம்

**காஞ்சி மகாப் பெரியவா ஆசியோடு தாங்களும், தங்கள் குடும்பத்தாரும் எல்லா வளமும், நலமும் பெற மனதார பிராத்திக்கின்றோம்.** நிராகரிக்கப்பட்ட பெண் முதியோர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களுடைய நலனுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ அவ்வை ஹோம். கடந்த 17 ஆண்டுகளாக ஆதரவின்றியும், நோய்களால் பாதிக்கப்பட்டும், நடக்க முடியாமலும், படுத்த படுக்கையாகவும் உள்ள வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் கருணை உள்ளம் படைத்தவர்களின் ஆதரவோடு இலவசமாக செய்து, தினசரி இறை வழிபாடு, தியானம், திருமுறை பாராயணம் செய்து அவர்களை அன்போடும், அரவணைப்போடும் இறுதிவரை பாதுகாத்து வருகிறோம். எத்தனை வரங்கள் வேண்டுமானாலும் பெற எளிய வழி அன்னதானம் செய்வது மட்டுமே. ஆதரவற்ற அன்னையர்களுக்கு அன்னமிடுவதால் தாங்கள் புண்ணியத்தின் பலனை முழுமையாக பெறுகின்றீர்கள். உதவி செய்யும் நல்உள்ளங்கள் நீடூழி வாழ



தினமும் கூட்டுப் பிரார்த்தனையும், மங்கள பிரார்த்தனையும், அக்னி ஹோத்ரமும் மற்றும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று காயத்ரி ஹோமமும் நடைபெறுகிறது. ஸ்ரீ அவ்வை ஹோமில் உள்ள ஆதரவற்ற அன்னையர்களும் மகிழ்ச்சியுடன் தாங்கள் விரும்பும் விசேஷ அல்லது பண்டிகை நாட்களை கொண்டாட உங்கள் அன்பளிப்புகளை பொருட்களாவோ, தொகையாகவோ அனுப்பி உதவி செய்திட வேண்டுகிறோம். தங்களின் நன்கொடையால் பயன்பெறும் அனைத்து அன்னையர்களின் ஆசியாலும், வாழ்த்துக்களாலும் தாங்கள் பூரண ஆயுளும், அஷ்ட ஐஸ்வர்யங்களையும் பெறுவீர்கள். மேலும் தாங்களும் குடும்பத்துடன் இந்த இல்லத்தை பார்வையிடலாம்

**காப்பகத்தில் நடைபெறும் ஒரு நாள் நித்திய பூஜைக்கு ரூ.200/- அனுப்பும் அன்பர்களுக்கு காயத்ரி வண்ணபடமும், யந்திரமும் அனுப்பி வைக்கப்படும்**

**ஒரு நாள் காலை உணவுக்கு ரூ.550/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்**

**ஒரு நாள் மதிய உணவுக்கு ரூ.600/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்**

**ஒரு நாள் இரவு உணவுக்கு ரூ.500/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் நவரத்தின மாலை அனுப்பி வைக்கப்படும்**

**ஒரு நாள் உணவுக்கு ரூ.1,600/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்**

**5 நாள் உணவுக்கு ரூ.5,600/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் பவள மாலை அனுப்பி வைக்கப்படும்**

**10 நாள் உணவுக்கு ரூ.11,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீகாயத்ரி விக்ரகம் அனுப்பி வைக்கப்படும்**

**அன்னையர் ஒருவருக்கு ஒரு வருட மருத்துவச் செலவு ரூ.1,400/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான தந்வந்த்ரி டாலர் அனுப்பி வைக்கப்படும்**

**அன்னையர்களுக்கான ஒரு மாத பால் செலவு ரூ.2,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீஅன்னபூரணி டாலர் அனுப்பி வைக்கப்படும்**


**அன்னையர்களின் உடைகளுக்கு ரூ.3,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீகாயத்ரி, ஹயக்ரீவர் டாலர் அனுப்பி வைக்கப்படும்**

**காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்புபவர்களுக்கு வெள்ளியிலான மகாப் பெரியவா, ஆதிசங்கரர் டாலர் அனுப்பி வைக்கப்படும்**

**ஒரு அன்னையரை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.4,400/- அனுப்புபவர்களுக்கு ஒரிஜினல் ஸ்படிக லிங்கம் அனுப்பி வைக்கப்படும்**


## தாங்கள் விரும்பும் கோவில்களில் மகாவில்வம் நடுவீர்! மகேசன் அருள் பெறுவீர்!!

## கட்டிட நிதி



சிவனுக்குகந்த மகாவில்வம்

ஆதரவின்றியும், நோய்களால் பாதிக்கப்பட்டும், நடக்க முடியாமலும், படுத்த படுக்கையாகவும் உள்ள எங்களது இல்ல வயதான அன்னையர்களின் உடல்நிலை, மருத்துவ தேவைகளை கருத்தில்கொண்டும், புதிதாக உதவிகேட்டு வரும் ஆதரவற்ற அன்னையர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை என்பதாலும் எங்களது இல்ல கட்டிடத்தை மேலும் விரிவுபடுத்த உள்ளோம். இதற்கு தங்களால் இயன்ற நிதி உதவிகளை கட்டிட நிதியாக வழங்க அன்புடன் வேண்டுகிறோம். கட்டிட நிதியாக ரூ. 10,000/-க்கு மேல் அனுப்புபவர்களுக்கு சிவனுக்குகந்த மகாவில்வச் செடி ஒன்று தாங்கள் விரும்பும் கோவில்களில் தங்கள் சார்பாக நடப்படும். சிவனுக்கு உகந்த பத்திரங்களில் முதன்மையான இடத்தை பெறுவது வில்வமே. மூவிலை வில்வமே அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் 5,7,10,15,21 ஆகிய இதழ்களைக் கொண்ட மகா வில்வச் செடிகளும் உண்டு. மகா வில்வதரிசனம் 1008 சிவாலய தரிசனத்திற்கு இணை ஆகும். மகாவில்வம் அனைத்து நோய்களையும் போக்கும் சர்வரோக நிவாரணி, மகாவில்வத்தைத் தொட்டாலும் பார்த்தாலும் வலம் வந்தாலும் உடலுக்கும் உள்ளத்திற்கும் அதீத சக்தி உண்டாகிறது. மகா வில்வம் நடுவதால் குடும்பம் வாழையடி வாழையாக செல்வ செழிப்புடன் திகழவும், ஆரோக்கியம் சிறக்கவும், எண்ணியவை ஈடேறவும், மேலும் இந்த அதீத ஈர்ப்பு சக்தி வாய்ந்த மகா வில்வ இலையால் சிவபெருமானை அர்ச்சிக்கவும் வழிவகை செய்கிறீர்கள். தமிழகத்திலுள்ள அனைத்து பாடல் பெற்ற கோவில்களிலும் எல்லாம் வல்ல இம்மகாவில்வத்தை நட்டு, மகாவில்வத்தாலேயே சிவனுக்கு அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதே எங்களின் நோக்கமாகும். எங்களது இல்லத்திற்கு கட்டிட நிதியை அனுப்பி இக்கிடைத்தற்கரிய மகாவில்வம் நடும் பணியில் தாங்களும் குடும்பத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம். குடும்பத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட ஆதரவற்ற அன்னையருக்காக கட்டப்படும் கட்டிடத்திற்கு நீங்கள் அளிப்பது தானமல்ல பரிசு. அதிலும் உயிருள்ள பரிசு.



ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீ அவ்வை ஹோமில் கலைமகள், திருமகள் அருளை ஒருசேர வழங்கி அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் சகல தேவதா ஸ்ரீ காயத்ரி ஹோமம் மற்றும் சிறப்பு ஐஸ்வர்ய கலச பூஜையும் நடைபெறும். இதில் தாங்கள் பங்கு பெற சங்கல்ப கட்டணம் ரூ. 300/- மட்டுமே. நீண்ட ஆயுள், சகல காரிய வெற்றி, நிலம்/வீடு வாங்குவதற்கும், திருமாங்கல்யம்/மழலை பாக்கியம், வியாபாரத் தடைகளைப் போக்கி சகல மங்களமும், லக்ஷ்மி கடாட்சமும் கிடைக்கச் செய்கிறது. தங்கள் பிரார்த்தனைகளுக்கு ஏற்ப தனித் தனியாக ஹோமத்தில் சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி மந்திரம், மகாமந்திரம், மகாமிருத்யுஞ்சய மந்திரம் மற்றும் ஜெப மாலை அடங்கிய சி.டி.யும், ஸ்ரீகாயத்ரி ரக்ஷை மற்றும் ஹோம பஸ்பமும் அனுப்பி வைக்கப்படும்

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் மற்றும் முகவரி, தொலைபேசி எண்களை தெளிவாக குறிப்பிட்டு கீழ்க்கண்ட முகவரிக்கு **CHEQUE/ DD/MO** மூலமாக **SRI AVVAI HOME, CHENNAI** என்ற பெயருக்கு அனுப்ப வேண்டுகிறோம். நன்கொடை அனுப்பும் அனைவருக்கும் காயத்ரி ஹோமத்தில் சங்கல்பம் செய்து பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும், பிரசாதங்களும், ரசீதும் அனுப்பி வைக்கப்படும்



உரத்த சிந்தனை பத்திரிக்கை அன்பர்கள் ஸ்ரீ அவ்வை ஹோம் இல்ல பெண் முதியவர்களுடன் தீபாவளி கொண்டாடி மகிழ்ந்தபோது

**தங்களின் பிறந்த நாள், திருமண நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் அன்னையர்களுக்கு நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடையினால் அவர்களின் இதயங்களிலிருந்து வரும் நல்வாழ்த்துக்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் என்றும் வாழ வைக்கும்**



மகாப் பெரியவா ஆசியோடு 17 ஆண்டுகளாக ஆதரவற்ற அன்னையரை ஆதரித்து, அரவணைக்கும் ஆனந்தம் தரும் அன்பு இல்லம்

AVVAI HOME IS THE POWER HOUSE OF DIVINE ENERGY

# ஸ்ரீ அவ்வை ஹோம்

குன்றத்தூர் முருகன் கோயில் அடிவாரம், குன்றத்தூர், சென்னை-69

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

**Off: 8754 888 888**
**Home: 8754 999 999**
**www.sriavvaihome.com**

**தலைக்கட்டும் உங்கள் தலைமுறை! மகிழ்ச்சியும், செல்வமும் மேன்மேலும் பெருகட்டும் உங்கள் இல்லங்களில்!!**

## தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# மக்கள் பணியிலும் இந்த அக்கறை வேண்டும்

கவர்ச்சியும் வசீகரமும் உறுதியான தலைமைப் பண்பும் கொண்ட தலைவர் மரபைக் கொண்ட அதிமுகவுக்கு எம்ஜிஆர், ஜெயலலிதா இடத்தை நிரப்பக் கூடியவர்களாக பழனிசாமி, பன்னீர்செல்வம் இல்லை என்ற குரல் கட்சித் தொண்டர்களிடம் வலுவாகக் கேட்கிறது.

ஆளும் அதிமுகவின் இரு அணிகளுக்குள் நடந்த பலப் பரீட்சையில் ஒரு முக்கிய நகர்வாக கட்சியும் சின்னமும் முதல்வர் பழனி சாமி, துணை முதல்வர் பன்னீர்செல்வம் தலைமை-யிலான அணிக்குக் கிடைத் திருக்கின்றன.

இரட்டை இலைச் சின்னம் யாருக்கு என்பதைத் தீர்மானிக்க தேர்தல் ஆணை யத்துக்குப் பெரிய சிரமம் ஏற்படவில்லை. முன்னதாக இருவேறு கூறுகளாக இருந்த பழனிசாமி - பன்னீர்செல்வம் இருவர் தலைமையிலான அணிகளும் ஒன்று சேர்ந்துவிட்ட பின், சட்ட மன்றம், நாடாளுமன்றம், கட்சி அமைப்பு மூன்றிலும் உள்ள உறுப்பினர்களை அடிப்படை யாகக் கொண்டு தன்னுடைய முடிவை ஆணையம் வழங்கி விட்டது. பெரிய வெற்றி இது என்றாலும், முழு வெற்றி அல்ல.

மாநிலத்தின் உரிமைகளும் நலன்களும் பறிபோகின்றன என்பதோடு, டெல்லிக்கு முன் நிமிர்ந்து நிற்கும் தலைமை என்ற பெயரும் பறிபோய்க்கொண்டிருப்பதைக் கட்சியின் தொண்டர்கள் ரசித்துக் கொண்டிருக்கவில்லை. கட்சி நிர்வாகிகள் பதவிக்காக எதையும் இழக்கத் துணிந்து விட்டார்கள் என்ற பேச்சு பொதுத் தளத்தில் வெளிப் படையாகவே பேசப்படுகிறது.

பழனிசாமி - பன்னீர்செல்வம் அணிகளின் இணைப்பும் ஒன்றிணைந்ததாகத் தெரியவில்லை. “மாதங்கள் கழிந்தாலும் மனங்கள் இணையவில்லை” என்று பன்னீர்செல்வம் அணியின் தளகர்த்தர்களில் ஒருவரான மைத்ரேயன் வெளிப் படையாகவே தெரிவித்தார்.

“அது மைத்ரேயனின் தனிப்பட்ட கருத்து மட்டும் அல்ல; தொண்டர்களுடைய கருத்தும்தான்” என்று இன்னொரு முக்கிய தலைவரான நத்தம் விசுவநாதனும் வழிமொழிந்தார். மதுரையில் சனிக்கிழமை நடந்த நிகழ்ச்சியிலும் இரு அணிகளுக்கும் இடையிலான பூசல் பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. பழனிசாமி பங்கேற்ற நிகழ்ச்சியை பன்னீர் செல்வமும் அவருடைய ஆதரவாளர்களும் புறக்கணித்தனர்.

கீழே நிர்வாகிகள் நிலையிலும் இதே நிலைமைதான் நிலவு கிறது. இது ஒருபுறம் இருக்க மறுபுறம் சின்னத்தை இழந்தாலும், கட்சி வட்டாரத்தைத் தாண்டியும் தினகரன் தனக்கென்று ஒரு கூட்டத்தை உருவாக்கிவருவது வெளிப் படையாகவே தெரிகிறது. ஆக, சின்னம் கிடைத்துவிட்டதை அரை இறுதிப் போட்டியில் பழனிசாமிக்குக் கிடைத் திருக்கும் வெற்றியாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. சூட்டோடு சூடாக அறிவிக்கப்பட்டிருக்கும் ஆர்.கே.நகர் தேர்தலில் தினகரனும் போட்டியிடுவது உறுதியாகிவிட்ட நிலையில் முதல்வர் பழனிசாமி எதிர்கொள்ளும் அமிலச் சோதனையாக இந்த இடைத்தேர்தல் அமையப்போவது உறுதியாகி விட்டது.

பழனிசாமி, பன்னீர்செல்வம், தினகரன் மூவருமே ஒரு விஷயத்தை நினைவில் கொள்வது முக்கியம். எம்ஜிஆரோ, ஜெயலலிதாவோ இவ்வளவு செல்வாக்கைக் கட்சியில் பெற்றிருந்ததற்குக் காரணம் மக்கள் மத்தியில் அவர்களுக்கு இருந்த செல்வாக்கு. மாநிலத்தின் உரிமைகளைப் பறி கொடுக் காமல், டெல்லியிடம் பேரம் பேசுவதில் அவர்களுக்கு இருந்த தெளிவும் மக்கள் நலத் திட்டங்களைக் கொண்டுவருவதில் அவர்கள் காட்டிய அக்கறை மக்களுக்கு தெரியாததா என்ன? மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டால் இலையை மட்டும் நம்பி பிரயோஜனம் இல்லை. கடந்த கால வரலாற்றை சற்று இ.பி.எஸ்., ஓ.பி.எஸ். & கோ உணர வேண்டும்.

- முனைவர் **ஆ. மவுரியன்**




# திவாலான போக்குவரத்துக் கழகம்

பல்லவன் பணிமனை மட்டுமில்லாமல் மேலும் 7 இடங்களை அடமானம் வைத்து வங்கிகளில் கடன் வாங்கியது தி.மு.க ஆட்சியில் தான் என்று அமைச்சர் எம்.ஆர் விஜயபாஸ்கர் ஆதாரங்களுடன் குற்றம்சாட்டியுள்ளார்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் சென்னை தலைமை செயலகத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அரசு போக்குவரத்துக் கழகத்தின் தலைமை யிடமாக இருக்கும் பல்லவன் இல்லம் ரூ.7.50/- கோடிக்கு அடகு வைக்கப்பட்டுள்ளது என்பது பேரதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை மு.க.ஸ்டாலின் கூறியிருக்கிறார். ஆனால் பல்லவன் இல்லம் மட்டுமல்ல மேலும் 7 இடங்களை 1997 முதல் 2007 வரை அடமானம் வைத்து ரூ. 30.50 கோடி கடன் வாங்கியது தி.மு.க அரசு என்பதை மறந்துவிட்டு பேசுகிறார்.

அதிகப்பற்று பெற்றுள்ள விவரங்கள் 31.03.2011 மற்றும் 2011-18 வரை

1) அயனாவரம் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் 26.12.1997 திமுக ரூ. 2.00 கோடி கனரா வங்கி

2) மந்தைவெளி பணிமனை மற்றும் பேருந்து நிலையம் 29.10.1999 திமுக

3) பட்டுல்லாஸ் சாலை பணிமனை 12.03.1998 திமுக ரூ. 20.00 கோடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

4) அண்ணாநகர் (மேற்கு) பணிமனை மற்றும் பேருந்து நிலையம் 28.04.1999 திமுக

5) அம்பத்தூர் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் 08.02.2007 திமுக

6) பல்லவன் இல்லம் தலைமை அலுவலகம் 07.02.1997 திமுக ரூ. 2.50 கோடி இந்தியன் வங்கி

7) பேசின் பாலம் முணிமனை 14.05.2007 திமுக ரூ. 1.00 கோடி விஜயா வங்கி

8) திருவான்மியூர் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் 16.11.2006 திமுக ரூ. 5.00 கோடி யூகோ வங்கி

சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் கடன் : ரூ.554.50 கோடி

பெங்களூர் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் கடன் : ரூ.594.71 கோடி

பேருந்துகள் முறையாக பராமரிக்கப்பட வில்லை என்று கூறுகிறார். ஆனால் பேருந்துகளை பராமரிக்க பணிமனைகள்அவசியம். 2006 முதல் 2011 வரை தி.மு.க ஆட்சி காலத்தில் புதியதாக திறக்கப்பட்ட பணிமனைகளோ 10 மட்டும் தான். ஆனால் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் புதியதாக திறக்கப்பட்ட பணிமனைகளோ 42.

ஆகவே ஜெயலலிதா ஆட்சி காலத்தில் தான் பேருந்துகள் முறையாக பராமரிக்கப்பட்டுள்ளது. எனவேதான் அகில இந்திய அளவில் தமிழ்நாடு

அரசு போக்குவரத்து கழகங்கள் சிறந்த பராமரிப்பு, டீசல் சிக்கனம், டயர் பராமரிப்பு போன்றவற்றிற்காக 53 விருதுகளை பெற்றுள்ளது. தி.மு.க ஆட்சிக்காலத்தில் 37 விருதுகளை பெற்றுள்ளது.

அரசு போக்குவரத்து கழக ஊழியர்களின் சேமநல நிதி, ஓய்வூதியம், காப்பீடுகள் போன்றவற்றை போக்குவரத்துக்கழகங்களுக்காக பயன்படுத்திய காரணத்தால், ஊழியர்களுக்குகிடைக்க வேண்டிய ஓய்வூதியப் பயன்கள் கிடைக்காததால் போக்குவரத்து ஊழியர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டை கூறியிருக்கிறார்.

கடந்த 2006-ம் ஆண்டு முதல் 2011 வரை ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வுக் கால பலன்களின் நிலுவைத் தொகை தி.மு.க ஆட்சியில் ரூ.922.24 கோடி. ஆனால் அ.தி.மு.க அரசு வழங்கியது.



ரூ.1,231.96 கோடி. ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு தி.மு.க ஆட்சியில் வழங்கப்பட்ட தொகை ரூ.928.86 கோடி. அ.தி.மு.க ஆட்சியிலோ ரூ.3,050.34 கோடி. அதிகம் ரூ. 2,121.48 கோடி. போக்குவரத்து கழகங்களுக்கு தி.மு.க ஆட்சியில் அரசு வழங்கிய தொகை ரூ.3,685.89 கோடி. அ.தி.மு.க ஆட்சியில் வழங்கப்பட்டதோ ரூ.10,513.00 கோடி. தி.மு.க ஆட்சியை விட அதிகம் ரூ.6,827.11 கோடி

போக்குவரத்து தொழிலாளர்களின் நலனில் அக்கறை உள்ள அ.தி.மு.க அரசு போக்குவரத்து தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக எம்.ஜி.ஆ.ரால் ஈரோட்டில் பொறியியல் கல்லூரியும், பெருந்துறையில் மருத்துவக் கல்லூரியும் துவக்கப்பட்டு இது நாள் வரை போக்குவரத்து தொழிலாளர்களின் குழந்தைகளில் 3801 பேர் பொறியியல் பட்டமும் 479 பேர் மருத்துவ பட்டமும் பெற்றுள்ளனர்.

மேலும் மருத்துவக்கல்லூரியில் சேர்க்கை 60 லிருந்து 100ஆக உயர்த்தப்படதனால் தொழிலாளர்களின் குழந்தைகள் 21 லிருந்து 30 பேர் கல்வி பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா, ஆட்சியில் திருநெல்வேலி, பர்கூர், குரோம்பேட்டை ஆகிய இடங்களில் பாலிடெக்னிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு இதுவரை போக்குவரத்து தொழிலாளர்களின் குழந்தைகளில் 3388 பேர் பட்டயம்பெற்றுள்ளனர்.

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவால் 2013-ம் ஆண்டு அண்ணா பிறந்த நாளான. செப்டம்பர் 15ம் தேதி அன்று அம்மா குடிநீர்திட்டத்தை செயல்படுத்தப்பட்டது. அதன்படி பாதுகாக்கப்பட்ட அம்மா குடிநீர் ஒரு லிட்டர் பாட்டிலின் விலை வெறும் பத்து ரூபாய்.

வெளிச்சந்தையில் ஒரு லிட்டர் குடிநீரின் விலை ரூபாய் இருபது, மத்திய அரசின் ரயில்வே துறை வழங்கும் ஒரு லிட்டர் குடிநீர் பாட்டியின் விலை ரூபாய் பதினைந்து. சராசரியாக நாளொன்றிற்கு 1.35 லட்சம் குடிநீர் பாட்டில்கள் விற்பனை செய்யப்படுகிறது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா ஆணையின்படி 23.10.2013 அன்று சிறிய பேருந்து சேவை சென்னை மாநகரத்தில் தொடங்கப்பட்டு தற்போது 200 சிற்றுந்துகள் இயங்கி வருகிறது.

மூத்த குடிமக்கள் விலையில்லாப் பேருந்து பயண அட்டை திட்டம் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் முதல் மூத்த குடிமக்களுக்கு சென்னை மாநகர் போக்குவரத்து கழகப் பேருந்துகளில், இலவச பயண வசதி திட்டத்தை துவக்கி வைத்து இதுவரையில் 2 கோடியே 92 லட்சத்து 10 ஆயிரம் பேர் பயணமசெய்துள்ளனர். சராசரியாக ஒரு நாளைக்கு 46 ஆயிரத்து 500 மூத்த குடிமக்கள் பயணம் செய்துவருகின்றனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் மிகப்பெரிய துறையாகும். இதில் பயணம் செய்யும் பயணிகள்எண்ணிக்கை ஒரு நாளைக்கு சுமார் 2 கோடி. இது ஒட்டுமொத்த இந்தியாவிலேயே ரயில்வேயில் ஒரு நாள் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கைக்கு நிகராக உள்ளது.எந்த அரசாக இருந்தாலும் போக்குவரத்து கழகங்களின் வளர்ச்சிக்காக வங்கிகள் மற்றும் போக்குவரத்துவளர்ச்சி நிதி நிறுவனத்தில் கடன் பெறுவது என்பது இயல்பு, அதனால்தான் போக்குவரத்து துறை இவ்வளவு பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது என போக்குவரத்துத் துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தெரிவித்தார்.

- ரமேஷ்குமார்



# குஜராத்தில் சரியும் பா.ஜ.க

ஹர்திக் படேலும் நேருவைப் போல பெண்களை மயக்குபவர் தான் என்று தலைப்பிட்டு பாஜகவின் ஐடி பிரிவின் தலைவர் வெளியிட்டுள்ள நேருவின் புகைப்படங்கள் சர்ச்சைகளை உருவாக்கியுள்ளன.

குஜராத் தேர்தல் களத்தில் பாஜகவின் வாக்கு வங்கி குறைவதற்கான முக்கிய காரணமாக இருப் பவர் ஹர்திக் படேல். படேல் இன மக்களின் இட ஒதுக்கீட்டிற்காக போராடி வரும் ஹர்திக் படேலை எப்படியாவது வளைத்து போட்டு விடலாம் என்று பாஜக திட்டம் போட்டது. ஆனால் அது முடியவில்லை இதனால் தற்போது அவருக்கு எதிரான விமர்சனங்களை திருப்பி விடும் வேலைகளில் பாஜக இறங்கியுள்ளது.

பெண் ஒருவருடன் ஹர்திக் படேல் மிக நெருக்கமாக இருப்பது போன்ற வீடியோ சில தினங்களுக்கு முன்னர் வெளியானது. இதனைத் தொடர்ந்து ஹர்திக் அவருடைய நண்பர்களுடன் மது அருந்துவது போன்ற 4 வீடியோ காட்சி களும் வெளியாகின. இந்த வீடியோ குறித்து சட்டபடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ள ஹர்திக், பாஜக அத்துமீறி தன்னுடைய தனிப்பட்ட விவகாரங்களில் நுழைவதாகக் கூறி இருந்தார்.

இது தொடர்பாக தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் பங்கேற்று பேசிய பாஜகவின் தேசிய செய்தி தொடர்பாளர் சம்பிட் பத்ரா, ஹர்திக் படேல் அப்படியே பெண்களை மயக்குவதில் நேருவைப் போல இருக்கிறார் என்று கூறி இருந்தார். இவருக்கு ஒரு படி மேலே போய் பாஜகவின் ஐடி பிரிவின் தலைவர் அமித் மால்வியா ஜவஹர்லால் நேரு பெண்களுடன் நெருங்கிப் பேசும் புகைப்படங்களை வெளியிட் டுள்ளார். இதற்கு ஹர்திக்கிற்கு நேருவின் டி.என்.ஏ இருக்கும் போல என்றும் அவர் தலைப்பிட்டுள்ளார்.

ஆனால் நேருவின் புகைப்படத்தை போட்டு இந்த தலைப்பிட்ட மால்வியா ஒரு விஷயத்தை கவனிக்கத் தவறி விட்டார் போல. நேருவின் புகைப்படத்தை போட்டவர் அதில் 2 புகைப் படங்களில் அவர் கட்டித் தழுவி மகிழ்ச்சியடை வது நேருவின் சகோதரி விஜயலட்சுமி என்பதை பார்க்க வில்லையோ.

மற்றொரு புகைப்படத்தில் நேருவின் குடும்ப நண்பரும் விடுதலை போராட்ட வீரருமான அம்மு சுவாமிநாதனின் மகள் மிருனாளினி சாராபாய் (விக்ரம் சாராபாயின் மனைவி) மனுஷ்யா நடனம் ஆடியதற்காக பாராட்டிய போது எடுத்த புகைப்படம். கதகளி அங்கீகரிக்கப்படாத அந்த காலகட்டத்திலேயே நேரு தன்னுடைய நிகழ்ச் சிக்கு வந்து பாராட்டியதாக மிருனாளினியே பேட்டி ஒன்றில் கூறி இருக்கிறார்.

ஜவஹர்லால் நேருவின் புகைப்படங்களை ஹர்திக் படேலுடன் ஒப்பிட்டு போடப்பட்டுள்ள இந்த டுவீட் தேசிய கட்சியான பாஜகவிற்கு அழகா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதிலும் பாஜக வாக்கிற்காக இந்த அளவிற்கு மோசமா கவா செயல்பட்டிருக்க வேண்டும் என்றும் கேட்கத் தோன்றுகிறது. அமித் மால்வியாவின் இந்த டுவீட் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.

– கனகதுர்கா



## ரிசர்வ் வங்கி அறிவிப்பு

# ரூ.10 நாணயத்தை வாங்க மறுத்தால் புகார் தெரிவிக்கலாம்

பத்து ரூபாய் நாணயங்கள் சட்டப்படி செல்லும். எனவே அவற்றை வாங்க மறுப்பவர்கள் பற்றி புகார் தெரிவிக்கலாம் என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

மத்திய அரசால் தயாரிக்கப்பட்ட நாணயங்களை ரிசர்வ் வங்கி புழக்கத்தில் விடுகிறது. ரூபாய் நோட்டுகளை விட நாணயங்கள் நீண்ட காலத்துக்கு புழக்கத்தில் இருக்கும். ஒரே மதிப்பில் வெவ்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளில் இந்த நாணயங்கள் புழக்கத்தில் இருந்து வருகின்றன. அந்த வகையில் புழக்கத்தில் உள்ள 10 ரூபாய் நாணயங்களிலும் அவ்வப்போது பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு தயாரிக்கப்படுகின்றன.

ஏற்கெனவே புழக்கத்தில் உள்ள 10 ரூபாய் நாணயங்களில் இருந்து அவை சற்றே மாறுபட்டுத் தோன்றினாலும், அனைத்துமே சட்டப்படி செல்லுபடியாகும். இந்த நாணயங்கள் அனைத்து விதமான பரிவர்த்தனைகளுக்கும் ஏற்றவை.

இருப்பினும் பத்து ரூபாய் நாணயங்கள் குறித்து தேவையற்ற வதந்திகள் பரப்பப் படுவதால் சில இடங்களில் இந்த நாணயங்களைப் பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் தயக்கம் காட்டுகின்றனர். இந்த வதந்திகளை நம்ப வேண்டாம் என்று ரிசர்வ் வங்கி தொடர்ந்து பிரசாரம் செய்து வருகிறது. இருப்பினும் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் வணிக மையங்களிலும் கடைகளிலும் இந்த நாணயங்களைப் பெற்றுக் கொள்வதில்லை என்று ரிசர்வ் வங்கிக்கு புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. இந்த 10 ரூபாய் நாணயங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்பதை ரிசர்வ் வங்கி மீண்டும் ஒருமுறை உறுதிபடுத்துகிறது.

10 ரூபாய் நாணயங்கள் செல்லாது என்ற வதந்திகளை புறக்கணித்து 10 ரூபாய் நாணயங்களை தொடர்ந்து பயன்படுத் தலாம். புதிய மற்றும் பழைய 10 ரூபாய் நாணயங்கள் அனைத்தும் புழக்கத்தில் நீடிக்கும். இதனை தடையோ, ரத்தோ செய்யவில்லை.

பொது மக்களும், வணிகர்களும் 10 ரூபாய் நாணயங்களைப் பயன் படுத்துவதற்கு தடையேதும் கிடையாது. இவ்வாறு 10 ரூபாய் நாணயங்களை வாங்க மறுப்பவர்கள் பற்றி, ரிசர்வ் வங்கியின் வழங்கல் துறைக்கு 044 25399222 என்ற எண்ணுக்கு புகார் தெரிவிக்கலாம் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது

**- இர்வின்**

# காற்று மாசு

# திட்டமிட்ட சதியா?

கடந்த ஆண்டு வெளியான ‘எக்ஸோடஸ் - காட்ஸ் அண்ட் கிங்ஸ்’ என்ற ஆங்கிலப் படத்தில் ஒரு காட்சி வரும். இயற்கை சீற்றங்களால் எகிப்து நாட்டு மக்கள் அழிவதைக் காட்டியிருப்பார்கள். முதலில் நைல் நதி சிவப்பு நிறத்துக்கு மாறும். மீன்கள் செத்து மிதக்கும். குடிக்க தண்ணீர் இல்லாமல் போகும். அடுத்து, கால்நடைகள் நோய் வந்து செத்து மடியும். லட்சக்கணக்கில் எங்கிருந்தோ வரும் வெட்டுக்கிளிகள் பயிர்களை சேதப்படுத்தும். அதையடுத்து தொடர்ந்து 3 நாட்கள் இருள் சூழ்ந்திருக்கும். யாருமே வீட்டை விட்டு வெளியே வர முடியாது. தொற்று நோய் பரவி மக்கள் கொத்து கொத்தாய் செத்து மடிவார்கள். இதே போன்ற நிலைமை தான் டெல்லியிலும். காரணம் பனிப்புகை. இந்தப் புகை மண்டலத்தால் பள்ளிக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

காற்றின் தரக் குறியீடு (Air Quality Index) 100 இருந்தாலே அது உடல் நலத்துக்கு கேடு. அப்படி இருக்கும்போது, டெல்லியில் 500 வரை இருக்கிறது தரக் குறியீடு. இது மிகப் பெரிய சுகாதாரக் கேடாகும். குழந்தைகள், வயதானவர்கள், ஆஸ்துமா தொல்லை உள்ளவர்கள் போன்றோரின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது. அதனால்தான் இந்திய மருத்துவ சங்கம் டெல்லியில் சுகாதார அவசர நிலையை அறிவித்தது. மாஸ்க் அணியாமல் யாரும் வெளியே வர வேண்டாம் என எச்சரிக்கை விடுத்தது.

பஞ்சாப், ஹரியாணா, டெல்லி, உ.பி. என வட மாநிலங்கள் அனைத்தும் காற்று மாசு காரணமாக மூச்சுத் திணறி வருகின்றன. இதற்கு, அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள், அடுப்புக் கரி என பல காரணங்கள் இருந்தாலும், குறிப்பாக அறுவடை முடிந்தபின் வைக்கோல்களை எரிப்பதுதான் முக்கிய காரணம். வட மாநிலங்களில் கோதுமை வைக்கோலைத் தான் மாட்டுக்குத் தீவனமாகப் பயன்படுத்துவார்கள். அதனால்தான் நெல் வைக்கோலை எரித்து விடுகிறார்கள்.

பஞ்சாபில் 28 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்படுவது வழக்கம். இந்த நெல் அறுவடை முடிந்ததும், கோதுமை பயிரிட







புதுடெல்லி

வேண்டிய நேரம் இது. அதனால்தான் இந்த அளவுக்கு வைக்கோலுக்கு தீவைக்கும் சம்பவங்கள் அதிகரித்து, டெல்லியை பனிப்புகை சூழ்ந்துள்ளது. மொத்தம் 40 ஆயிரத்து 510 தீவைப்பு சம்பவங்கள். வைக்கோலை எரித்தால் ரூ.2500 முதல் 15 ஆயிரம் வரை அபராதம் விதித்தாலும் சம்பவங்கள் குறையவில்லை.

விவசாயிகளைப் பொறுத்தவரை, அறுவடை முடிந்த பின், வைக்கோலை அகற்றுவது பெரிய வேலை. 15 கி.மீ. தொலைவிலேயே பயோமாஸ் மின்னுற்பத்தி நிலையம் இருக்கிறது. அங்கு வைக்கோலை கொண்டு போய் கொடுத்தால், குவின்டாலுக்கு ரூ.100 தருவார்கள். ஆனால் அதை ஆட்களை வைத்து லாரியில் ஏற்றி இறக்குவதற்கே அதைவிட கூடுதல் செலவாகும். அதனால்தான், வைக்கோலை தீ வைத்து எரித்து விடுகிறார்கள். அதிகம் போனால் அரை மணி நேரம்தான். அத்தனையும் எரிந்து சாம்பலாகி விடும். அது அடுத்த பயிருக்கு உரமாக மாறிவிடும். ஆனால், எரிப்பதால் உருவாகும் புகை, 2 நாளில் 300 முதல் 400 கி.மீ. தூரத்தில் உள்ள டெல்லியை சூழ்ந்து கொள்கிறது.

உ.பி., ராஜஸ்தான், ஹரியாணாவில் தொழிற்சாலைகளில் பெட்கோக் எனப்படும் கரி அதிகம் பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் கழிவாக மிஞ்சும் பொருள்தான் பெட்கோக். அதிக வெப்பத்தை தரும் இந்தக் கரி அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. காற்று மாசு காரணமாக அமெரிக்காவில் இதைப் பயன் படுத்த தடை விதிக்கப்பட்டது. அதன் பிறகு, சீனா இதை அதிக அளவில் இறக்குமதி செய்து பயன்படுத்தி வந்தது. அங்கும் புகை மாசு ஏற்பட, இறக்குமதி அடியோடு குறைந்து விட்டது.

ஆனால் உலக நாடுகளில் இந்தியாதான் இந்தக் கரியை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது. கடந்த 2011 முதல் 2016 வரையி லான 5 ஆண்டுகளில் இதன் இறக்குமதி 9 மடங்கு அதிகரித்துள்ளது. இந்தக் கரியில் கார்பன் டை ஆக்ஸைடு, சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஸ் ஆக்ஸைடு, மெர்க்குரி, ஆர்சனிக், குரோமியம், நிக்கல் போன்ற நச்சுக்கள் அதிகம். டெல்லியில் 1996-ம் ஆண்டிலேயே இந்தக் கரி தடை செய்யப் பட்டது. ஆனால் சுற்றியுள்ள மாநிலங்களில் கடந்த நவம்பர் 1-ம் தேதி முதல்தான் உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. இதை எதிர்த்து தொழில் நிறுவனங்கள் தொடர்ந்த வழக்கில், தடையை நீக்க மறுத்துள்ளது நீதிமன்றம்.

புகைக்கு மூன்றாவது காரணம் வாகனங்கள். குருகிராம், நொய்டா நகரங்களில் காலையிலும் மாலையிலும் அகலமான 8 வழிப் பாதையிலும் கார்கள் ஊர்ந்துதான் செல்ல வேண்டியிருக்கும். அந்த அளவுக்கு வாகன நெரிசல். இவை வெளி யிடும் புகையும் காற்று மாசுக்கு முக்கிய காரண மாக இருக்கிறது. இதனால்தான், சாலைகளில் ஓடும் கார்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்தில் ஒரு நாள் ஒற்றைப்படை எண் களைக் கொண்ட கார்களும் மறுநாள் இரட்டைப் படை எண்களைக் கொண்ட கார்களும் ஓட்ட லாம் என டெல்லி அரசு புதிய திட்டத்தைக் கொண்டு வந்தது.

பஞ்சாப், ஹரியாணா மாநிலங்களில் வைக்கோலை எரிப்பது முற்றிலுமாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்கு மாநில அரசே வைக்கோலை விவசாயிகளிடம் இருந்து பெற்று, தேவையான மாநிலங்களுக்கு அனுப்பலாம். அல்லது பயோமாஸ் மின்னுற்பத்தி நிலையங் களுக்கு அனுப்பலாம். அப்படி செய்தால், எரிப்பது குறையும்.

1952-ம் ஆண்டு டிசம்பர் மாதம். லண்டன் நகரில் இதேபோன்ற புகை மண்டல பிரச்சினை. ஈரப்பதம் நிறைந்த, அதிகம் காற்று வீசாத வானிலையோடு, வாகனப் புகையும் வீட்டில் இருந்து வெளியேறும் புகையும் கலந்தது. இதனால் ஏற்பட்ட பனிப்புகை நகரை சூழ்ந்தது. சாலையில் மட்டுமல்ல, வீடுகளிலும் அலுவலகங் களிலும் கூட புகை சூழ்ந்து முட்டி மோதித்தான் நடமாடும் அளவுக்கு மோசமான நிலைமை. உள்ளேயே இந்த நிலைமை என்றால் வெளியில் சாலைகளில் கேட்கவா வேண்டும்? எங்கு பார்த் தாலும் விபத்துகள். மூச்சுத் திணறல் ஓலங்கள். தொடர்ந்து ஆம்புலன்ஸ்களின் சைரன் ஒலி எங்கு பார்த்தாலும் ஒலித்தது. முதன்முறையாக லண்டனில் ரயில், பஸ் போன்ற பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தியேட்டர்கள் மூடப்பட்டன. பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

இந்த மோசமான நிலைமை முடிவுக்கு வந்தபோது, 4 ஆயிரம் பேர் இறந்து போயிருந் தனர். ஏறக்குறைய ஒரு லட்சம் பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

**- அகிலாண்டேஸ்வரி**



# திறந்தநிலை பல்கலைக்கழகத்தை இனி மூடி விடலாம்

பத்தாம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு படிக்காமல் நேரடியாக திறந்தநிலை பல்கலைக்கழகங்கள் மூலம் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் பெற்று, அதன் பின்னர் சட்டம் முடித்து வழக்கறிஞர்களாக பதிவு செய்யக்கூடாது என்று 2010-ம் ஆண்டு அகில இந்திய பார் கவுன்சில் உத்தரவிட்டது. அதன்படி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் திறந்தநிலை பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்று வழக்கறிஞராகப் பதிவு செய்துள்ள 742 பேருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

திறந்த நிலைப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற 742 வழக்கறிஞர்களை இடைநீக்கம் செய்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் பிறப்பித்த உத்தரவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்தது.

மேலும் இதன் மீதான விசாரணை முடியும் வரை, எந்த நீதிமன்றத்திலும் ஆஜராகக் கூடாது என்று கூறி அவர்களை இடை நீக்கம் செய்து உத்தரவிட்டது. இதனை எதிர்த்து இடைநீக்கம் செய்யப்பட்ட வழக்கறிஞர் வி.எஸ்.நாகராஜ் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, நீதிபதி எம்.சுந்தர் ஆகியோர் கொண்ட முதல் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, "விதிமுறைகள் உருவாக்குவதற்கு முன்னர் திறந்தநிலை பல்கலை கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதால், 742 பேர் வழக்கறிஞர் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், "வழக்கறிஞர் பதிவை இடைநீக்கம் செய்த அறிவிப்புக்கு தடை விதிக்கப்படுகிறது. இந்த வழக்கறிஞர்கள் தங்களது தொழிலை தொடரலாம். நோட்டீஸ் மீது உரிய அவகாசம் வழங்கி விளக்கம் கேட்க வேண்டும். அவற்றின் மீது எடுக்கப்படும் முடிவுகள் நீதிமன்ற தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

நாடு முழுவதும் ஒரே சீரான வரியை அமல்படுத்தும் ஜிஎஸ்டி முறையை மத்திய அரசு அறிமுகம் செய்தது. இந்த ஜிஎஸ்டி முறையால் மக்கள் குறிப்பாக ஏழை, நடுத்தர மக்கள் கடும் பாதிப்பு அடைவார்கள் என்ற பூதாகரமான மாயத்தோற்றத்தை அனைவரும் எழுப்பினார்கள். ஆனால் ஜிஎஸ்டியால் வாடிக்கையாளர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு கிடையாது.

வியாபாரிகள் ஜிஎஸ்டியை முறையாக அமல்படுத்தி கட்டணம் வசூலித்தால் மக்கள் பாதிப்பு அடையமுடியாது. ஆனால் வணிகர்கள் வியாபார நுணுக்கங்களை புகுத்தி மக்களுக்கு புரியாத வகையில் கட்டணத்தை உயர்த்தி, அதற்கு பெயர் ஜிஎஸ்டி என்று சொல்வதால், மக்களுக்கு ஜிஎஸ்டி மீதும் மத்திய அரசு மீதும் ஒருவித வெறுப்பை உருவாக்கினார்கள்.

**- டி. ரவி**



# சர்க்கரை வியாதிக்கு இது முக்கிய காரணமா?

நம்மில் பெரும்பாலானவர்கள் இனிப்பு ருசிக்கு அடிமையானவர்கள்தான். இனிப்புக்கான வேட்கை, நாம் குழந்தைகளாக அம்மாவிடம் அருந்தும் தாய்ப்பாலிலிருந்து தொடங்குகிறது. இந்தியாவில் ஒரு நபர் சராசரியாக ஆண்டுக்கு 20 கிலோ வெள்ளைச் சர்க்கரையை உட்கொள்கிறார். ஒரு இந்தியர் சாப்பிடும் சீனியின் அளவை உலக சராசரியுடன் ஒப்பிட்டால், அது நான்கு கிலோ குறைவுதான்.

ஒரு அமெரிக்கர் சராசரியாக தினசரி 20 தேக்கரண்டி வெள்ளைச் சர்க்கரையை உட்கொள்கிறார். ஆனாலும் வெள்ளைச் சர்க்கரை வெறுமனே ஆற்றலைத் தருகிறதே தவிர, அதனால் உடலுக்கு எந்தச் சத்தோ பலனோ கிடைப்பதில்லை. அத்துடன் மூளையில் சார்புத் தன்மையை ஏற்படுத்தும் வெள்ளைச் சர்க்கரை, நம்மை அடிமைப்படுத்தவும் செய்கிறது.

விருந்துகளிலிருந்து கொண்டாட்டங்கள் வரை ஆதிக்கம் செலுத்தும் வெள்ளைச் சர்க்கரை, நம் அன்றாட வாழ்வின் அத்தியாவசியம்போலத் தோன்றினாலும், அது அவசியமில்லை என்பதே உண்மை. வெள்ளைச் சர்க்கரையிலிருந்து படிப் படியாக விடுபடுவதன் மூலம் உள ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் மேம்படும். அது சாத்தியமும்கூட.

வெள்ளைச் சர்க்கரை மட்டுமல்ல, ரொட்டி, மது, செயற்கை இனிப்பான்கள், சாக்லேட்டுகள், கேக்குகள், குளிர்பானங்கள் எல்லாவற்றையும் தவிர்க்கத் தொடங்குவதன் மூலமே வெள்ளைச் சர்க்கரை மீதான வேட்கையிலிருந்து நாம் தப்பிக்க முடியும். அதற்கு முதலில் இயற்கையான சர்க்கரைக்கும் - சேர்க்கப்படும் சர்க்கரைக்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இயற்கையான சர்க்கரை பழங்களிலும் காய்கறிகளிலும் கிடைக்கிறது. இவற்றில் புரதம், நார்ச்சத்துடன் சர்க்கரையும் சேர்ந்திருப்பதால் மெதுவாகச் செரிமானம் நடக்கிறது. இது உடலின் ஆற்றலுக்கான ஆரோக்கியமான ஆதாரமாக உள்ளது.

ஆனால், கடைகளில் ஆயத்த நிலையில் கிடைக்கும் பதப்படுத்தப்பட்ட உணவிலும் பானங்களிலும் மேற்கண்ட சத்துகள் எதுவுமே இல்லை. அவை உடலுக்கு வெறும் கலோரிகளையே தருகின்றன. இதைச் சாப்பிட்டவுடன் உடலின் ஆற்றல் சட்டென்று உயரும் அதே நேரம், உடனேயே தாழ்ந்தும் விடும். இவ்வகைச் சர்க்கரை வேகமாகச் செரிக்கப்படுவதால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு உயர்ந்து, அதே வேகத்தில் தாழ்ந்தும் விடுகிறது. ரத்தத்தில் திடீரென்று சர்க்கரை குறைவதால் பசி எடுக்கும். அத்துடன் உடலுக்குப் போதிய உழைப்பில்லாத, உட்கார்ந்திருக்கும் வேலைகளில் ஈடுபடுபவர்கள் இத்தகைய உணவைச் சாப்பிடும்போது உடல் பருமன், நீரிழிவு, இதய நோய்கள், ரத்த அழுத்தம் ஆகியவையும் ஏற்படும்.

ஆம். மூளையின் சந்தோஷ மையங்களைக் கிளர்த்தும் ஓபியோயிட், டோபமைன் ஆகியவை நாம் உட்கொள்ளும் சர்க்கரையால் வெளியிடப் படுகின்றன. போதை மருந்துகளும் இதைத்தான் உடலில் வெளியிடுகின்றன. இதில் ஒரு நல்ல செய்தியும் இருக்கிறது. மற்ற போதை மருந்துகளைப் போல, சர்க்கரையிலிருந்து நாம் விடுபட முயற்சித்தால் பக்க விளைவுகள் ஏதும் இருக்காது.

**- கே.பாலாஜி**




# அண்ணாமலையார் கோவிலில் கொள்ளையோ கொள்ளை

ஒட்டு மொத்த உலக மக்களையும் கவர்ந் திழுக்கும் வல்லமை கொண்டவர். நினைத் தாலே முக்தி தரக்கூடியவர். அழிக்கும் ஆற்றல் படைத்தவர். கயிலை மலையில் குடியிருந்து இப்பொழுது அண்ணாமலையாராய் திருவண் ணாமலை மலையாய், ஜோதியாய் உமையவ ளுக்கு இடபாகம் கொடுத்து ஆணும் பெண்ணும் உலகில் சமம் என்று உணர்த்தியவராய் சாட்சாத் நம்ம அண்ணாமலையார்தான்!


ஹரிபிரியா

மலையாய் இருக்கும் இவரை வலம் வருவதாக எண்ணி வெளிநாடு அண்டை மாநிலம் என்று நாளுக்குநாள் கூடிக் கொண்டே யிருக்கிறது பக்தர் கூட்டம்.

இந்த நிலையில் கடந்த 08.11.2017 அன்று தினமலர் நாளிதழில் வந்த செய்தியால் திருவண் ணா மலையில் பரபரப்பு பற்றிக் கொண்டது.

அப்படி என்ன செய்தி என்று பார்த்தால் திருவண்ணாமலை கோயிலில் ஸ்பதிகள் திடீர் ஆய்வால் பரபரப்பு அஷ்டபந்தனத்தில் கை வைத்தது யார்? என்ற கேள்வியால் வந்த செய்தியால் பரபரப்பு கூடியது!

என்ன நடந்தது என்ன நடந்திருக்கும் என்ற எதிர்ப்பார்ப்போடு எங்கள் மக்கள் விசாரணை களமிறங்கியது!


சோமசுந்தரம் ஜி

திருவண்ணாமலையில் பக்தி பரவசத்தோடு ஆன்மீக பணி செய்துவரும் எஸ்.சோம சுந்தரம் ஜி என்பவரிடம் விசாரித்தோம்!

காஞ்சமாடு கம்புல நுழைந்தால் மாடு என்ன உண்ணாவிரதமா இருக்கும்? பலதரப்பட்ட கையாடல், சுருட்டல், பணியில் மெத்தனம் என்று பல குற்றங்கள் புரிந்து 4 ஆண்டு சஸ்பெண்ட் ஆகிவிட்டு மீண்டும் திருவண்ணா

மலை அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு நியமிக் கப்பட்டார் இணை ஆணையர் ஹரிபிரியா சும்மா இருப்பாரா? சிவன் சொத்து குலநாசம்! என்பதை மறந்து சிவன் வங்கியிலே கொள்ளை நடத்தியிருக்கிறார்.

ஹரிபிரியா வர நேரம், அருணாசலேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் அப்புறம் என்ன ஹரிபிரியாவுக்கு பருத்தியே புடவையா காய்ச்ச மாதிரிதான்! கொள்ளையோ கொள்ளைதான் என்று முடித்தார் சோமசுந்தரம்ஜி.

சமூக ஆர்வலம் ஏ.சோமு டெய்லர் என்பவரை விசாரித்தோம் அஷ்டபந்தன கொள்ளை என்கிறார்களே அதைப்பற்றி சொல்லுங்கள் என்று கேட்டேன்.


சோமு டெய்லர்

பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு கடந்த பிப்ரவரி 6ந் தேதி கும்பாபிஷேகம் ஆனால் சில மாதங்களிலேயே கருவறை லிங்க பீடத்தில் சாற்றப்பட்ட அஷ்டபந்தனத்தில் விரிசல் ஏற்பட்டுள்ளதால் திருவண்ணாமலையில் புது சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கர்ப்ப கிரகத்தில் சுவாமி சிலைகள் பிரதிஷ்டை செய்யும்போது மந்திர தகடுகள், பொன், வெள்ளி, வைரம் உள்ளிட்ட நவரத்தின கற்கள் அடியில் போடுவார்கள் இதன்மூலம் உலோக சக்தி, மந்திர சக்தி, மனோ சக்தி யந்திர சக்தி ஆன்ம சக்தியால் கற்கள் தெய்வத்தன்மை அடைகிறது என்பது தொடர்ந்து வரும் நம்பிக்கை!

இந்நிலையில் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் நடந்தபோது ஆயிரம் கிலோ அஷ்டபந்தன மருந்து அருணாசலேஸ்வரர், அம்பாள், சம்பந்த விநாயகர், நந்தி விநாயகர் மற்றும் பரிவார மூர்த்தி சன்னதிகளில் சாத்தப்பட்டிருக்கிறார்கள்.

கும்பாபிஷேகத்துக்கு முன்பு அஷ்டபந்தன மருந்து சாத்தும் நிகழ்ச்சி அப்போதைய கோயில் இணை ஆணையர் ஹரிபிரியா, குருக்கள், நாட்டு கோட்டை நகரத்தார், முக்கிய பிரமுகர்கள், போலீஸ் உயர் அதிகாரிகள் முன்னிலையில் நடந்திருக்கிறது.

கும்பாபிஷேகம் நடந்த சில மாதங்களிலேயே


## அஷ்டபந்தன மருந்து 12 மணி நேரத்தில் இறுகிவிடும் தவறுக்கு வாய்ப்பில்லை என்கிறார் இணை ஆணையர்

அருணாசலேசுவரர் கோவில் இணை ஆணையர் ஜெகந்நாதன். (அடுத்த படம்) அப்போதைய இணை ஆணையர் ஹரிப்பிரியா.


## அஷ்டபந்தனத்தில் கை வைத்தது யார்?
### தி.மலை கோயிலில் ஸ்தபதிகள் திடீர் ஆய்வால் பரபரப்பு

தினமலர் நாளிதழில் வெளிவந்த செய்திகள்

சுவாமி கருவறை லிங்க அடிப்பகுதியில் உள்ள அஷ்ட பந்தனத்தில் விரிசல் எப்படி ஏற்படும்? எல்லாம் நாடறிந்த ஹரிபிரியா அடித்த கொள்ளைதான் என்பது திருவண்ணாமலை பக்தர்கள் பேசுகிறார்கள் என்று முடித்தார் ஏ.சோமு டெய்லர்.

சமூக ஆர்வலர் கே.கோபி என்பவரை விசாரித்தோம்.


கோபி

கமிஷ்னர் ஜெயா உத்தரவின்படி மாநில தலைமை ஸ்தபதி மற்றும் அதிகாரிகள் கோயில் கருவறையில் ஆய்வு செய்து அஷ்டபந்தனத்தில் ஏற்பட்ட விரிசலை ஆய்வு செய்திருக்கிறார்கள்.

அஷ்டபந்தனம் சாத்தப்பட்ட பின்னர் கருவறை கதவு பூட்டப்பட்டு சாவி இணை ஆணையர்வசம் ஒப்படைக்கப்படும் கும்பாபிஷேகத்தின்போதுதான் இறை சக்தி கொடுக்கப் படும் பின்னர் தான் கருவறையில் குருக்கள் பூஜை செய்வார்கள்.

ஆனால் அஷ்டபந்தனம் சாத்தப்பட்ட

சில மணிநேரங்களில் அவை கலைக்கப்பட்டு மீண்டும் சாத்தப்பட்டு இருந்தால் பின்னாளில் இதுபோன்ற விரிசல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது உறுதித் தன்மை அடைந்த பின்னர் உடைக்கவோ பெயர்க்கும் முயற்சி நடக்க வாய்ப்பில்லை என்கிறார்கள் சிவாச்சாரியார்கள்!

செய்த அநியாயங்கள் அண்ணாமலையார் பார்க்கவா போகிறார் என்று அஷ்டபந்தனத்தை உடைத்து ஹரிபிரியா தலைமையில் கொள்ளையோ கொள்ளை நடந்ததாக புலப்படுகிறது நெற்றிக் கண்ணால் காமனை மட்டும்தான் பரமன் எறிப்பார் என்று நினைத்துக் கொண்டிருக்கும் ஹரிபிரியாவுக்கு தண்டனை உறுதிதான் என சமூக ஆர்வலர் கே.கோபி சொல்லி முடித்தார்!



ஆ.தே.முருகையன்

தமிழக சமூக விழிப்புணர்வு மையத்தின் நிறுவனத் தலைவர் கவிஞர் ஆ.தே.முருகையன் கூறியதாவது...

திருவண்ணாமலையில் அறநிலையத்துறை அமைச்சர் இருக்கும்போது அதுவும் திருவண்ணாமலையிலே இருக்கும்போது அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் கொள்ளையோ கொள்ளை கும்பாபிஷேக கொள்ளை என்று செய்தி தாள் மற்றும் சமூக ஊடகம் பக்தர்கள், பொதுமக்கள் என்றும் எல்லோரும் குற்றம் சாட்டுகிறபோது அந்த துறை அமைச்சர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதுதான் மக்களின் கேள்வி?

அமைச்சர் கண்டுகொள்ளவில்லையா? கண்டு கொண்டதால் கண்டு கொள்ளவில்லையா?

கோயில் அதிகாரிகள், ஊழியர்கள், அண்ணாமலையாரை வைத்து காசு சம்பாதிப்பதையே குறிக்கோளாக இருப்பது திருவண்ணாமலையில் பழைய கதை தற்பொழுது அஷ்டபந்தனத்தில் கைவைத்து விலை உயர்ந்த வைரம், வைடூரியம், மரகதம் போன்ற பொருட்களை கொள்ளை அடித்திருப்பதாக பக்தர்களும் பொதுமக்களும் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். இதுதான் புதுக்கதை.

இதில் உள்ள உண்மைகளை உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டுவது அற நிலையத் துறையில் கடமை!

கும்பாபிஷேகத்தில் நடந்ததாக சொல்லப்படும் கொள்ளையோ கொள்ளையில் திருவண்ணாமலை மக்கள் சந்தேகப்படும் இணை ஆணையர் ஹரிபிரியாவை விசாரிக்க விசாரணை கமிஷன் வைக்க வேண்டும் இதற்கு தற்பொழுது இணை ஆணையர் ஜெகநாதன் ஒத்துழைப்பு நல்க வேண்டும் மாவட்டாட்சியர் துரிதப்படுத்த வேண்டும் திருவண்ணாமலை சமூக அமைப்புகளும் இந்து மக்கள் அமைப்புகளும் உறுதுணையாக இருக்க வேண்டும் ! எங்கள் தமிழக சமூக விழிப்புணர்வு மையம் என்றும் நியாயம் கிடைக்க போராடுவோம் என்று முடித்தார்.



வழக்கறிஞர் பாபு

வழக்கறிஞர் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் மாநில மாணவரணி துணை அமைப்பாளர் பாசறை பாபு அவர்களை விசாரித்தபோது மாதா மாதம் கோடிக்கணக்கில் நன்கொடை குவிந்து கொண்டே இருக்கிறது.

கிரிவலம் வரும் பக்தர்கள் கூட்டம் மாதாமாதம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் ஆலயத்தில் உரிய குடிநீர் வசதி, நிழற்பந்தல் வசதி, குளியலறை, கழிப்பிட வசதி அதிகளவில் இல்லாமல் பக்தர்கள் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள்.

லஞ்ச லாவண்யங்களில் ஈடுபடும் போக்கை கண்டித்து தமிழக அரசு அண்ணாமலையார் ஆலய நிர்வாகிகள் மீதான ஊழியர் புகார்களை துரிதமாக விசாரித்து தண்டனை கொடுக்க வேண்டும் இவர் நினைத்தால் முக்தி தரக்கூடியவர் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். அண்ணாமலையார் நல்லதை நினைத்து நல்லதை செய்பவர்களுக்கு முக்தியை தருவார்

எங்கள் கழகத்தின் சார்பில் 29.03.2017ல் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானமே போட்டிருக்கிறோம்.

அண்ணாமலையார் ஆலயம் அஷ்டபந்தன கொள்ளை சார்ந்த ஊழல் புகார்களுக்கு விசாரணை கமிஷன் வைக்கச் சொல்லி தீர்மான நகல் துறை சார்ந்த அனைவருக்கும் அனுப்பி உள்ளேன் என்று வழக்கறிஞர் பாசறை பாபு கூறினார்.

**- எம். பரமசிவம்**



# இந்தியாவின் 6-வது
# உலக அழகி
## ஒரு சிறப்புப் பார்வை

இந்தியாவைச் சேர்ந்த 20 வயதாகும் மானுஷி சில்லர், 108 நாடுகளிலில் இருந்து உலக அழகி போட்டிக்கு வந்திருந்த பெண்கள் அனைவரையும் பின்னுக்கு தள்ளி ஹரியானா மாநிலத்தை சேர்ந்த மனுஷி சில்லார் 2017ம் ஆண்டிற்கான உலக அழகி பட்டத்தை வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மருத்துவ மாணவியான மனுஷி ஹரியானா மாநிலத்தை சேர்ந்தவர். இவரின் பெற்றோர் மருத்துவர்கள். மனுஷியின் தந்தை டாக்டர் மித்ரா பாசு சில்லார் டிஆர்டிஓவில் விஞ்ஞானியாக உள்ளார். இவரின் தாய் டாக்டர் நீலம் சில்லார் நியூரோ ஹெமிஸ்ட்ரி துறையின் பேராசிரியர்.

சோனிப்பேட்டையில் பகத் பூல் சிங் பெண்கள் அரசு மருத்துவக் கல்லூரியில் மனுஷி மருத்துவம் படித்து வருகிறார். இவர் குச்சிப்புடி நடனத்தில் சிறப்பு பெற்றவர். கடந்த ஜூன் மாதத்தில் மனுஷி பெமினா மிஸ் இந்தியா போட்டியில் ஹரியானா மாநிலம் சார்பாக போட்டியிட்டார். அந்த போட்டியில் மிஸ் போடோஜெனிக் பட்டத்தை மனுஷி பெற்றுள் ளார். இதனைத் தொடர்ந்து மிஸ் வேல்ட் 2017க்கான இறுதிப் போட்டியாளர்களில் டாப் மாடலாக மனுஷி இடம்பெற்றார்.

கலாசார நடனத்தில் முறையான பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றவரரான மனுஷி சில்லார், மிகத் துணிச்சலானவர். 'பங்கி ஜம்ப்' என்ற ழைக்கப்படும் காலில் பிளாஸ்டிக் கையிரைக் கட்டிக்கொண்டு உயரமான இடத்திலிருந்து கீழே குதிக்கும் விளையாட்டில் அதிகம் ஈடுபட்டு வருபவர். இதனைத் தொடர்ந்து மிஸ் வேல்ட் 2017க்கான இறுதிப் போட்டியாளர்களில் டாப் மாடலாக மனுஷி இடம் பெற்றார்.

2017 ம் ஆண்டின் ஃபெமினா மிஸ் இந்தியாவாக மனுஷி சில்லார் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். மேலும், மிஸ் மெக்ஸ்கோ போட்டியில் ரன்னர் பட்டமும், மிஸ் இங்கி லாந்து போட்டியில் 3 இடத்தை பெற்றிருக் கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக அழகி பட்டம் வென்ற இந்தியாவைச் சேர்ந்த மனுஷி சில்லாருக்கு பிரதமர் மோடி, அரியானா முதலமைச்சர் மனோகர் லால் கட்டார், மகாராஷ்ட்ரா முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமரின் இந்த வாழ்த்துக்கு உலக அழகி யான மனுஷி சில்லார் நன்றி தெரிவித்துள்ளார்.

இவருக்கு உலகம் முழுவதிலும் வாழ்த்துக்கள் குவிந்து வருகிறது. இந்திய திரை பிரபலங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் என பலர் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆசிரியர்

# பருவமழை சென்னைக்கு சாபமா?

சென்னையில் மழை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தபோது ஃபேஸ்புக்கில் ஒரு தகவலைப் படிக்க நேர்ந்தது. '1994-ல் சென்னையில் பெய்த மழைதான் உச்சம். இப்போதுபோல் அப்போது வெள்ளம் குறித்த பீதி ஏதுமில்லை. ஏனென்றால், இப்போது தண்ணீர்க் காடாக இருக்கும் பகுதிகளில் எல்லாம், அப்போது வீடுகள் வரவில்லை'. உண்மைதான், 2000-ம் ஆண்டுக்குப் பிறகு சென்னையின் புறநகர்ப் பகுதிகளின் புலிப் பாய்ச்சல் வளர்ச்சியும் பருவமழைக் காலத்தில் பீதியடையும் அளவுக்கு வெள்ளப் பாய்ச்சலும் ஒன்றுக்கொன்று நேரடித் தொடர்புடையது என்பது நிதர்சனம்தான்.

இயல்பைவிட அதிகமாக சென்னையில் மழை பெய்த தருணங்களில் பழமையான சென்னையின் பகுதிகள், மழையால் பாதிக் கப்பட்ட செய்திகளைக் கேள்விப்பட்டிருக்க முடியாது. அப்படியே மழை நீர் பெருக்கெடுத் தாலும் வடிந்துவிடும். ஆனால், கடந்த 20 ஆண்டுகளில் பிரம்மாண்ட வளர்ச்சிபெற்ற சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்தால், வடிய வழியே இல்லை.

ஏனென்றால், இப்படி வளர்ச்சிபெற்ற பகுதிகள் பலவும், ஒரு காலத்தில் மழை நீர் வடியும் பகுதிகளாக இருந்தன. அந்த இடத்தில் தான் இன்று கட்டிடங்கள் பிரம்மாண்டமாக எழுந்து நிற்கின்றன. பொதுவாக மழை நீர் தேங்கும் பகுதிகளுக்கு அருகே எப்படியும் குளம், ஏரி போன்ற நீர் ஆதாரப் பகுதிகள் இருக்கும். இவை மழை நீரை உள்வாங்கி தேக்கிவைத்துக்கொள்ளும். எனவே, அந்தக் காலத்தில் எந்தத் தொந்தரவும் ஏற்படவில்லை.

இன்றோ மழை நீர் தேங்கும் பகுதிகள் எல்லாம் கான்கிரீட் காடாக மாறிவிட்டன. விளைவு, பருவமழைக் காலத்தில் ஓரிரு நாட்கள் தொடர்ச்சியாக மழை பெய்தாலே, 'சென்னை மிதக்கிறது' என்று சொல்லும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. 'எங்கள் வீட்டருகே குளமோ ஏரியோ இல்லை.

ஆனால், மழைக் காலத்தில் தண்ணீர் புகுந்துவிடுகிறது' என்று சிலர் கூறலாம். அருகே குளமோ ஏரியோ இல்லாமலிருக்கலாம். ஆனால், அந்தப் பகுதிகள் நிச்சயம் நீர்வழித் தடமாக இருந்திருக்கும். மழை நீர், பள்ளத்தை நோக்கியோ ஏரி, குளம் போன்ற நீர் ஆதாரத்தை நோக்கியோ பாயும் வழித்தடத்தில் கட்டிடம் இருந்தால்? விளைவு, புறநகர்ப் பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன என்ற செய்தி பருவமழைக் காலத்தில் வாடிக்கையாகிறது.

வளர்ச்சியின் பெயரால் ஏரி, குளம் போன்ற நீர் ஆதாரப் பகுதிகள் அழிக்கப்பட்ட தால்தான் சென்னைப் புறநகர்ப் பகுதியில் தத்ததளிதத்க் கொண்டிருப்பதே சாபமாக இருக்கிறது.

- ஆர்.ஜெயா



# தமிழுக்கு ஆபத்து?

அண்டை மாநிலமான கேரளாவில் பள்ளி இறுதிப்படிப்பு வரை மலையாளம் கற்பிப்பது சட்டமாகி நடைமுறைக்கு வந்துள்ளது. மேற்கு வங்கத்திலும் வங்காளம் படிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் கட்டாயம் கன்னடம் படித்தே தீரவேண்டும் என்று சமீபத்தில் அந்த மாநில முதல்வர் சித்தராமய்யா குரல் எழுப்பியுள்ளார்.

தாய்மொழியை காக்க பெரும் யுத்தமே நடத்தி, 300க்கும் மேற்பட்ட உயிர்களை பலி கொடுத்த மாநிலம் தமிழகம். தற்போது தமிழகத்தில் தான் தாய்மொழி தமிழுக்கு மீண்டும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தமிழை ஒரு பாடமாகவே கற்காமல் பட்ட மேற்படிப்பையே முடிக்க முடியும் என்ற சாபக்கேடு ஏற்பட்டுள்ளது.

10ம் வகுப்பு பயிலும் பிறமொழி பேசும் மாணவர்களுக்கு, தமிழ் கட்டாய பாடம் என்பதில் இருந்து விலக்கு அளித்து பள்ளி கல்வித்துறை அரசாணை பிறப்பித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதை கட்டாயமாக்குவதை உறுதி செய்ய, கடந்த 2006ல் முந்தைய திமுக ஆட்சியில் தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம்-2006 கொண்டு வரப்பட்டது. அதன்படி, 2006-07 கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு தமிழ் கற்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது. அதற்கடுத்த கல்வி ஆண்டில் ஒன்று, இரண்டு ஆகிய வகுப்புகளுக்கு தமிழையே கட்டாய மொழிப்பாடமாக கற்பிக்க வேண்டும்.

இவ்வாறு படிப்படியாக சட்டம் அமல்படுத்தப்பட்டு, 2015-16ல் 10ம் வகுப்பு பொது தேர்வின்போது தமிழையே கட்டாய மொழிப்பாடமாக பகுதி ஒன்றில் எழுத வழிவகை செய்யப்பட்டது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு, உச்சநீதிமன்றம் வரை சென்றபோதும் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஒரு மாநிலத்தில் வசிக்கும் பிற மொழியினர் அம்மாநில மொழியை ஒரு பாடமாக கற்பது நாட்டு மக்களின் ஒற்றுமைக்கு உதவும் என்றும் தனது தீர்ப்பில் கூறியது.

உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழை ஒரு பாடமாக பகுதி ஒன்றில் கட்டாயமாக கற்பிப்பது சரியே என தீர்ப்பளித்துள்ளன.

தமிழ் மொழி கற்றல் சட்டம் அமலுக்கு வந்து 10 ஆண்டுகள் கடந்த பின்னர் கூட, முழு பலன் கிடைப்பதில் தொடர்ந்து தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. மொழி சிறுபான்மை மாணவர்களுக்கு இச்சட்டம் பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறி, தமிழை நசுக்கும் வேலைகள் நடக்கின்றன.

இந்த சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் குறித்த அறிவிக்கை, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. சட்டத்தை நடைமுறைப்படுத்த உரிய அதிகாரிகளுக்கு பொறுப்பும் அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு பள்ளிகளுக்கும் தெரியப்படுத்தி 2006-2007 கல்வி ஆண்டில், முதல் வகுப்பில் சேர்ந்த மாணவர்களுக்கு தமிழை மட்டுமே அனைத்து வகைப் பள்ளிகளிலும் பகுதி ஒன்று மொழிப்பாடத்தில் கற்றுத் தருவதை உறுதி செய்து அதற்கான உறுதிமொழியையும் பெற்றுள்ளனர்.

சட்டங்களை பின்பற்றும் பள்ளிகளில், எந்த சிக்கலும் இல்லை. சட்டத்தையும், நீதிமன்றத் தீர்ப்பையும் அரசின் உத்தரவுகளையும் மதிக்காமல் செயல்பட்டு வரும் சில நிறுவனங்கள் மட்டுமே, மொழிப்பாட விவகாரத்தில் மாணவர்களை மையமாக்கி அரசை நிர்ப்பந்திக்கின்றன.

**-சண்முகவேல்**





# சிந்தனை முத்துக்கள்

## அடி அப்படி போடு

சிங்கப்பூர்ல 7%
ஜி.எஸ்.டி. வாங்குறாங்க,
அங்கெல்லாம் மழை
பெய்ஞ்சா ரோட்டுல
நிக்காது.
இந்தியாவில்
28% ஜி.எஸ்.டி.
வரி வாங்குறாங்க
இங்கெல்லாம் மழை
பெய்ஞ்சா ரோடே
இருக்காது.

## வீழ்ச்சி

வளர்ச்சிக்கும்
வீழ்ச்சிக்கும்
உள்ள வித்தியாசம்!
அடுத்தது நான் என்ன
செய்ய போகிறேன் என்று
ஒருவன் யோசித்தால்
அது அவனுக்கு வளர்ச்சி!
அடுத்தது அவன் என்ன
செய்யப் போகிறான்
என்று மற்றவனைப் பற்றி
யோசித்தால்
அதுவே
அவனுக்கு வீழ்ச்சி!

## டவுட்டு

எனக்கு ஒரு டவுட்டு?
வருமானத்துக்கு
அதிகமாக
சொத்து இருந்தா
வழக்கு போடுவாங்கலாம்.
அதுபோல வருமானத்து
அதிகமாக கடன் இருந்தா
அடைச்சிடுவாங்களா?

## தலைவன்

வீடு புகுந்து
திருடினால் - திருடன்
நாடு முழுவதும்
திருடினால் தலைவன்

## சுலபம்

தகுதியானவர்களுக்கு
கிடைக்க வேண்டிய
எல்லா மரியாதையும்
தகுதியில்லாதவர்களுக்கு
சுலபமாக
கிடைத்து விடுகிறது.

## மறக்கக்கூடாது

கஷ்டத்தில்
உதவியவன்
கஷ்டத்தில்
உதவாதவன்
கஷ்டத்தை
உண்டாக்கியவன்

## இனிமே அப்படித்தான்

இடத்துக்கு தகுந்தவாறு
தன்னை மாற்றிக்
கொள்பவன் மட்டுமே
இன்று ஜெயிக்கிறான்

## அட அப்படியா சேதி

உலகிலேய
அதிகமாக பொய்
பேசப்படும் இடம்
சட்ட சபை.
உலகிலேயே
அதிகமாக உண்மை
பேசும் இடம்
டாஸ்மாக்.

## தன் வினை

நீ செய்கின்ற வினையும்,
தீ வினையும் ஓர்
எதிரொலியைக்
காட்டாமல் மறையாது.
நீ விதைத்த விதைகள்
நீயே அறுவடை செய்த
பின்னால்தான் அந்த
நிலத்தில் வேறு பயிர்களை
பயிரிட முடியும்.

## என்ன சார்?

தேசிய நெடுஞ்
சாலைகளை ஊரக
நெடுஞ்சாலைகளாக
மாற்றி மதுக்கடைகளை
திறக்கலாம் - நீதிபதி



என்ன சார்
என் பைக்கோட பேர
சைக்கில்னு மாத்திட்டேன்
இதுக்குப் போய்
இன்சூரன்ஸ்,
லைசென்ஸ்
எல்லாம் கேட்குறீங்க?
- வாகன ஓட்டி

## அப்ப மத்தவங்க

இந்தியாவில்
65% ஆண்கள்
பொண்டாடி பேச்சு
கேட்குறாங்க!
அப்ப மத்தவனுங்க?
அவங்களுக்கு இன்னும்
கல்யாணம் ஆகல..

## கோடீஸ்வரர்

கடன், பகை, நோய்
இந்த மூன்றும் இல்லாமல்
குடிசையில் வாழ்ந்தாலும்
அவனே கோடீஸ்வரன்

## நாங்க எங்கே போறது

லஞ்சம் கேட்கும்
அதிகாரிகளை செருப்பால்
அடியுங்கள்.
- தெலுங்கானா முதல்வர்
சநதிரசேகர் ராவ்!

நல்லவேள! தமிழ் நாட்டப்
பார்த்து சொல்லல,
சொல்லியிருந்தா
அவ்வளவு
செருப்புக்கு
நாங்க
எங்க போறது?

## அடுத்தவங்களை நம்பாதீங்க!

பிறப்பு -
அடுத்தவன் கொடுத்தது
பெயர் -
அடுத்தவர் வைத்தது
கல்வி -
அடுத்தவர் கொடுத்தது
வருமானம் -
அடுத்தவர் கொடுப்பது
மரியாதை -
அடுத்தவர் கொடுப்பது
முதல் மாற்றம்
கடைசி குளியல் -
அடுத்தவர் செய்வது
இறுதி சடங்கு -
அடுத்தவர் செய்வது
இப்படி எல்லாமே
நம் வாழ்க்கையில்
அடுத்தவர்கள்
துணையோடு
இருக்கும்போது
இந்த போட்டி, ஈகோ,
பொறாமை, பிரச்சனை
எதற்கு? அன்புடன்
நிம்மதியாக வாழ்வோம்.
ஆனா எந்நேரமும்
அடுத்தவங்கள
நம்பாதீங்க!



மருத்துவப் பட்டப்படிப்பு (எம்பிபிஎஸ்) மற்றும் பட்ட மேற்படிப்புக்கு மாணவர்களை சேர்க்க 'நீட்' என்ற தேசிய நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. அடுத்த ஆண்டு பட்டமேற்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான 'நீட்' தேர்வுக்கு அக்டோபர் 31 முதல் நவம்பர் 27 வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப் பட்டது. இத்தேர்வு ஜனவரி 1-ம் தேதி நடைபெற உள்ளது. தேர்வு முடிவுகள் ஜனவரி 31-ல் வெளியாக உள்ளன. இதற்கான தேர்வு மையங்கள் நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் பல்வேறு நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விண்ணப்பம் தொடங்கிய 2-வது நாளே தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் தேர்வு மையங்களில் இடமில்லை எனவும், வேறு மாநிலங்களை தேர்வு செய்யும்படியும் அதன் இணைய தளத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து, தேர்வு எழுதக் காத்திருக்கும் தமிழக எம்பிபிஎஸ் மாணவர்கள் கூறும்போது,

"இந்த தேர்வை வேறு மாநிலத்தில் எழுதினால் தேவையற்ற பதற்றம் உருவாகும். சோதனை என்ற பெயரில் தமிழக மாணவர்களுக்கு வட மாநிலங்களில் அதிக தொல்லை தரப்படுகிறது. இதனால் மனதளவில் ஏற்படும் பாதிப்பு தேர்விலும் உண்டாகும். தேர்வுக்கு 4 நாட்கள் முன்புதான் தேர்வு மையம் எது என்பது உறுதி செய்யப்படும். இதன்பிறகு பயண முன்பதிவு செய்து அங்கு போய் சேர்வதே ஒருவித தண்டனை ஆகும். மாணவர்கள் சொந்த மாநிலத்திலேயே தேர்வு எழுத வாய்ப்பு அளிக்க வேண்டும். விண்ணப் பிக்கும் கடைசி தேதியை ஒத்தி வைத்து, தேர்வு மையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்" என்று தெரிவித்தனர்.

இந்த தேர்வை தேசிய தேர்வு வாரியம் (National Board of Examinations) நடத்துகிறது. இதன் இணையதளத்தில்தான் தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதில் புகார் அளிக்க இரு கட்டணமில்லா சேவை எண்கள் (1800 111 800, 1800 111 700) தரப்பட்டுள்ளன. "இவை இரண்டுமே எந்நேரமும் பிஸியாக உள்ளன.

சிலசமயம் அதன் மணி அடித்தாலும் பதில் தரப்படுவதில்லை" என மாணவர்கள் கூறுகின்றனர். இமெயில் மூலமாகவும் புகார் அளிக்க இணையதளத்தில் விலாசம் தரப்பட் டுள்ளது. இதில் அளிக்கும் புகார்களுக்கு பெரும்பாலும் பதில் வருவதில்லை என கூறப்படுகிறது.

இதுகுறித்து தமிழக மாணவர்கள் பலரும் சுகாதார செயலாளர் அலுவலகத்தில் புகார் கூறியுள்ளனர். இதற்கு, "இதுகுறித்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளோம். பதிலுக்காக காத்திருக்கிறோம்" என பதில் கிடைத்துள்ளது.

இதுகுறித்து தேசிய தேர்வு வாரிய நிர்வாக இயக்குநர் ரஜினிகாந்த் தவே கூறும்போது,





'தமிழகத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களில் 90 சதவீதம் பேருக்கு அங்கேயே இடம் கிடைத்து விடும். தேர்வுக்காக இந்திய அளவில் 1,20,000 மாணவர்களை அனுமதிக்க முடிவு செய்தோம். அடுத்த இரு நாட்களில் தென் மாநிலங்களுக்கு 16 ஆயிரம், மற்ற மாநிலங்களுக்கு 4 ஆயிரம் என இது அதிகரிக்கப்பட்டது. பிறகு நவம்பர் 8-ல் ஒரு அறிவிப்பளித்து சொந்த மாநிலங்களில் தேர்வு மையம் கிடைக்க வில்லை எனில் 'Others' எனும் வாய்ப்பை தேர்ந்தெடுத்து விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கக் கூறி இருந்தோம்.

இவர்களுக்கு கடைசி தேதியான நவம்பர் 27-க்கு பிறகு விண்ணப்ப முகவரி மூலம் தேர்வு மையம் ஒதுக்குவோம். இவர்களில் 80 சதவீதம் பேருக்கு சொந்த மாநிலம் அல்லது அருகிலுள்ள மாநிலங்களில் தேர்வு மையம் கிடைத்துவிடும். தமிழகம், கேரளாவில் இருந்து எங்களுக்கு அதிக புகார்கள் வந்துள்ளன. இவற்றுக்கு நவம்பர் 27-க்கு பிறகு பதில் அளிக்கப்படும்" என்றார்.

'நீட்' தேர்வு இணையதள தேர்வாக நடத்தப்படுகிறது. இது கடந்த ஆண்டு தொடர்ந்து ஒரு வாரத்திற்கு 16 முறை நடத்தப்பட்டது. இவற்றில் 1,21,000 மாணவர்கள் தேர்வு எழுதினர். வெவ்வேறு வினாத்தாள் என்பதால் அவை பாரபட்சமாக இருப்பதாக மாணவர்கள் புகார் கிளப்பினர். இம்முறை இத்தேர்வு ஒரே நாளில் ஒரே வினாத்தாளில் நடத்தப்பட உள்ளது. ●

**- மாரிமுத்து**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

**மக்கள் விசாரணை**

Applied in **NEWS PAPER ASSOCIATION OF INDIA**

**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-6 டிசம்பர்-2017 இதழ்-7

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,Dip. Journilisam,

● ஆசிரியர் குழு
**காசி. அரங்கநாதன், A. காதர் மொய்தீன்,**
**ஆ.தே. முருகையன், V. அருணாச்சலம், மு. பரமசிவம்**

● நிர்வாக ஆசிரியர்
**வீ. வடிவேல்,** B.B.A.,

● துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார்,**
**S. கோபி, எஸ். சரவணன், பி. மாரிமுத்து,**
**D. ரவி, வீரஆறுமுகம், ந. நித்யா,**
**கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி**

● முதன்மை செய்தியாளர்கள்
**S. ராம்குமார்** சேலம் **M. சத்தியராஜ்,** நாமக்கல்.
**A. பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை,
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,
**வெங்கடேசன்** தி.மலை **S. ரமேஷ், அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

● நிருபர்கள்
**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, வ. சங்கர்**
**அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஏழுமலை**

● சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர்,** B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

● புகைப்பட நிருபர்கள் :
**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

● இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**

அலுவலகம் :
**மக்கள் விசாரணை**
நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
Information Contact : feedback@makkalvisaranai.com
**Phone : 044 - 4354 2611, 93821 33334**

**Press & Registration of Book Act-in** ன்படி
செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள
நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.



# இந்தியாவுக்கு அப்பால்

## Speed It Up! GMail ரகசியங்கள்!

கூகுள் வழங்கும் ஜிமெயில் சேவை பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஜிமெயில் லேப்ஸ் தெரியுமா? அது வழங்கும் உப சேவைகளைப் பற்றி தெரியுமா? இந்த சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இமெயில் செயல்திறனை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

'சுவாரசியமான சோதனை விஷயங்கள்' என்று ஜிமெயில் லேப்ஸ் பற்றி கூகுள் குறிப்பிடுகிறது. இது புதிய சேவைகளுக்கான சோதனைக்களம் எனப் புரிந்துகொள்ளலாம். அனுப்பிய இமெயிலைத் திரும்பப் பெற வழி செய்யும், 'அன்சென்ட்' (Unsent) வசதி உள்ளிட்ட சேவைகள் இந்தச் சோதனைக்கூடத்தில் உதயமானவை தாம். எல்லா சேவைகளும் ஜிமெயில் வசதிகளாக அறிமுகமாவதில்லை என்றாலும், சோதனைக்கூட சேவைகளை முயன்று பார்ப்பது பயனுள்ளதாகவே இருக்கும்.

ஜிமெயில் லேப்ஸ் சோதனை வசதியை ஜிமெயிலின் 'டெஸ்க்டாப்' வடிவில் மட்டுமே அணுக முடியும். ஜிமெயில் லேப்ஸ் வசதியைப் பெற, ஜிமெயில் கணக்குக்குள் நுழைந்து கியர் ஐகானை கிளிக் செய்து, செட்டிங்ஸ் பகுதியை கிளிக் செய்ய வேண்டும். பின்னர் லேப்ஸ் பகுதியை கிளிக் செய்தால், அதற்கான தனிப் பக்கத்தை அடையலாம். அதில் வரிசையாகக் காணப்படும் சேவை அம்சங்களிலிருந்து தேர்வு செய்து, மாற்றத்தைச் சேமித்துக்கொண்டால் அந்த வசதியைப் பயன்படுத்தலாம். இந்த சேவை தேவையில்லையென்றால், அதை எளிதாக நீக்கிவிடலாம்.

ஒரே ஒரு இன்பாக்ஸுக்குப் பதில் பல இன்பாக்ஸை உருவாக்கிக்கொள்ள முடிந்தால் வசதியாக இருக்கும் அல்லவா? 'மல்பிட்பிள் இன்பாக்ஸ்' அம்சம் மூலம் இதை ஜிமெயில் லேப்ஸ் சாத்தியமாக்குகிறது. இதன் மூலம் இமெயில்களைப் பல்வேறு தலைப்புகளின் கீழ் தனித்தனி இன்பாக்சாகப் பிரித்துக்கொள்ளலாம். மெயிலை வகைப்படுத்தி தொகுப்பதன் மூலம் பல இன்பாக்ஸ்கள் இருப்பதுபோன்ற தோற்றம் கிடைத்தாலும், நடைமுறையில் இது பயனுள்ளதாகவே இருக்கும்.

இந்த வசதியைத் தேர்வு செய்த பிறகு மெயிலைப் பயன்படுத்தும்போது, செட்டிங்ஸ் பகுதிக்குச் சென்று பல இன்பாக்ஸ் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். அதன் பிறகு குறிச்சொல்லுக்கு ஏற்ப மெயில்களை வகைப்படுத்திக் கொள்ளலாம்.

இணைய பயன்பாட்டில் பிரவுசர் குறுக்கு வழிகள் மிகவும் பிரபலமானவை. ஒன்றுக்கும் மேற்பட்ட கிளிக் தேவைப்படக்கூடிய இடங்களில் அவற்றை உடனே அணுக குறுக்கு வழிகள் கைகொடுக்கின்றன. ஜிமெயில் செயல்பாடுகளை விரைவுப்படுத்திப் பிரத்யேகக் குறுக்கு வழிகளும் இருக்கின்றன. இவற்றோடு உங்களுக்கான குறுக்குவழிகளை அமைத்துக் கொள்ள கூகுள் வழி செய்கிறது. செட்டிங்ஸ் பகுதியில் 'கீபோர்ட் ஷார்ட்கட்ஸ்' எனும் பகுதிக்குச் சென்றால், தேவையான குறுக்கு வழிகளை அமைத்துக்கொள்ளலாம்.

இமெயில்களின் தன்மைக்கு ஏற்ப அவற்றுக் கான பதில்கள் மாறும். சில மெயில்களுக்கு ஒரே விதமான பதில்களை அனுப்பும் நிலையும் இருக்கலாம். இதுபோன்ற சூழலில் ஒரே விதமான பதிலை மீண்டும் அடிப்பது அலுப்பூட்டும். இதைத் தவிர்க்க 'கேண்ட் ரஸ்பான்ஸ்' வசதியைப் பயன்படுத்தலாம். நிர்ணயிக்கப்பட்ட பதில்கள் தேவைப்படும் மெயில்களுக்கு, அவற்றை மீண்டும் டைப் செய்யாமல் இந்த வசதியை கிளிக் செய்து அதே பதிலை அனுப்பிவிடலாம். இந்த வசதியை உருவாக்கிகொண்ட பிறகு கம்போஸ் பகுதிக்கு அருகே இதற்கான பட்டனைக் காணலாம்.

மெயில்களைப் பிரிக்க அவற்றுக்கான ஸ்மார்ட்லேபிள்களை உருவாக்கிக் கொள்ளலாம். நிதி, சமூகம், பயணம், அலுவலகம் என லேபிள் களுக்கு ஏற்ப இன்பாக்ஸில் வரும் மெயில்கள் தானாக வகைப்படுத்தப்படும். எந்த வகையான மெயில் தேவையோ அதை மட்டும் கிளிக் செய்து பார்க்கலாம். ஸ்மார்ட் லேபிள் தலைப்பின் கீழ் இந்த வசதியைப் பெறலாம்.



பலரும் கூகுள் காலாண்டரைப் பயன்படுத் தலாம். நிகழ்ச்சிகளைத் திட்டமிட, சந்திப்புகளை ஏற்பாடு செய்ய எனப் பலவற்றுக்கும் நாட் காட்டி வசதியைப் பயன்படுத்தலாம். ஆனால், நாட்காட்டி வசதியை ஒவ்வொரு முறையும் தனியே அணுகுவதைத் தவிர்க்க, ஜிமெயி லுக்குள்ளேயே அதைக் கொண்டுவரும் வசதியை லேப்ஸ் சேவையிலிருந்து அமைத்துக் கொள்ள லாம். ஜிமெயிலிலிருந்து வெளியேறாமலே நாட் காட்டியில் தகவல்களைச் சேர்க்க இது உதவுகிறது. இந்த வசதியை உருவாக்கிக் கொண்ட பிறகு, நாட்காட்டி சேவைக்கான வசதி இன்பாக்ஸ் இடப்பக்கத்தில் மூன்று புள்ளிகளாகத் தோன்றும்.

## நடுநிலை தவறாத நல்லிதழ்

சுடர் வீசும் கதிரவனுக்கு பகல் சொந்தம்!
சுழன்று வரும் நிலவுக்கு இரவு சொந்தம்!
தங்க குளத்திற்கு தாமரை சொந்தம்!
தாமரையின் மீதுள்ள
வாணிக்கு வீணை சொந்தம்!
அசைந்து வரும் நீருக்கு ஓடை சொந்தம்!
இசைபாடும் குயிலுக்கு சோலை சொந்தம்!
குன்றின் மீது குடிகொண்ட
முருகனுக்குவள்ளி சொந்தம்!
முடியாது என்பது மூட நம்பிக்கை!
முடியுமா என்பது அவநம்பிக்கை!
முடியும் என்பது தன்னம்பிக்கை!
என்ற மூல மந்திரத்தை உண்மையை
வெளிச்சத்திற்கு செய்திகளாகக்
கொண்டு வரும் துணிச்சல் மிக்க
மாதஇதழ் ஆன
நடுநிலையாளர்கள்
போற்றிப் புகழும்
"மக்கள் விசாரணை"
மாதஇதழ்
அனைவருக்கும் சொந்தம்!



**- ஞானவேல்**

இமெயில்களில் இன்னமும் திறக்கப்படா மல் இருக்கும் மெயில்கள் எத்தனை என்பதை உடனடியாக அறியும் வசதியை அன்ரெட் மெசேஜ் சேவை மூலம் பெறலாம். மெயில் களை நட்சத்திரக் குறியிட்டு அடையாளப் படுத்துவது போலவே இன்னும் பலவற்றுக்கான 'குவிக்லிங்க்ஸ்' இணைப்புகளையும் உருவாக்கிக் கொள்ளலாம்.

ஜிமெயில் லேப்ஸ் பகுதிக்குச் சென்று கொஞ்சம் பொறுமையாக அலசி ஆராய்ந்தால், உங்கள் ஜிமெயில் பயன்பாட்டை இன்னும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.



முனைவர் ஆ.மவுரியன்

# ராணி வேலுநாச்சியார்

தொடர்-2



வீரத் தமிழச்சிகளின் வரலாறு..!

அவ்விழாவிற்கு நாட்டுத் தலைவர்கள் அனைவரும் வந்திருந்தனர். சிறப்பான வழிபாடுகள் முடிந்த பின்னர் கோயில் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த இருக்கையில் இளவரசர் கௌரி வல்லபத் தேவரை அமரச் செய்து, பிரதானிகளும் நாட்டுத் தலைவர்களும் அவருக்கு மரியாதை செலுத்தி வணங்கினர்.

சில காலம் சென்ற பின்னர் சிவகங்கை பிரதானிகளுக்கு (மருது சகோதரர்களுக்கு) இளவரசர் கௌரி வல்லபத் தேவரை பிடிக்கவில்லை. வேலுநாச்சியார், தமது மகளை படமாத்தூர் கௌரி வல்லபத் தேவருக்குத் திருமணம் செய்து கொடுப்பது சம்பந்தமாய், இரு பிரதானிகளுடன் ஆலோசனை செய்தார்.

மருது சகோதரர்கள் அந்த திருமண சம்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்தனர். கௌரிவல்லபத் தேவர் சிவகங்கைச் சீமைக்கு மருமகனாவதற்குத் தகுதி, திறமையில்லாதவரென்றும், முரட்டுத் தனமும், அரசகுடும்பத்திற்குரிய தகுதிகள் இல்லாதவரென்றும், அவர்கள் மறுப்புத் தெரிவித்தனர். மிகுந்த வேதனையால் ராணி மிகக் கவலையடைந்தார்.

இதற்கிடையில் ராணி கௌரி வல்லபத் தேவரை தனது வாரிசாகத் தத்தெடுப்பதையும் திருமண உறவின் மூலம் அதிகாரம் பெறுவதையும் மருது சகோதரர்கள் விரும்பவில்லை. எனவே, அவர்கள் கௌரி வல்லபத் தேவரை காளையார் கோயில் ஆலயத்தில், தக்க பாதுகாப்பில் சிறைவைத்து அவரைக் கொலைசெய்ய முயன்றனர். இந்தச்செய்தி ராணியாருக்குக் கிடைத்ததும், மருது சகோதரர்களிடம் இதுபற்றிக் கேட்டார்.

கௌரி வல்லபத் தேவர் சிறையில் வைக்கப்படவில்லையென்றும், அவர் சிவ கங்கைச் சீமையைக் கைப்பற்றி இராமநாத புரம் - சிவகங்கைகொண்ட ஒருமுகப்படுத் தப்பட்ட 'சேது நாடு" ஒன்றை உருவாக்க இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னருடன் ஓலைத் தொடர்பு கொண்டிருப்பதாகவும், அது தொடர்பான விசாரணைக்காக அவரைக்காளையார் கோயில் ஆலயத்தில் தனிமைப்படுத்தி வைத்திருப்பதாகவும் கூறி ராணியைச் சமாதானப் படுத்தினர்.

பின்னர் கௌரி வல்லபத் தேவர் காளையர்கோயில் ஆலயத்தில் பணியாற்றும்

கருப்பாயி என்ற நடப் பெண் உதவி செய்து தப்பிக்க வைத்ததின் மூலம் காளையார் கோயிலிருந்து தப்பிச் சென்று, கரிசப்பட்டிப் பாளையக்காரர் வெ ள்ளை பொம்மை நாயக்கரிடம் தஞ்சமடைந்தார். பின்னர் மருது சகோதரர்களின்பலம் அறிந்து, அவர் கௌரி வல்லபத் தேவரைப் புதுக்கோட்டை மன்னரிடம் தஞ்சமடைந்த கௌரி வல்லபத் தேவரை மன்னர் அறந்தாங்கியில் மிகப் பாதுகாப்பாகத் தங்க வைத்திருந்தார்.

இளவரசி வெள்ளச்சி நாச்சியார் திருமணம் பற்றி மீண்டும் ராணி மருது சகோதரர்களிடம் ஆலோசனை செய்த போது தக்க மணமகன் ஒருவரை அவர்கள் தேடி வருவதாகவும், விரைவில் ராணிக்கு முடிவான தகவல் தருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ராணி மருது சகோதரர்களை மீறி எதுவும் செய்ய முடியவில்லை. சில மாதங்களுக்குப் பிறகு மருது சகோதரர்கள், இளவரசி வெ ள்ளச்சி நாச்சியாருக்கு சக்கந்தி வேங்கை பெரிய உடையணத் தேவர் என்பவரை திருமணம்செய்து வைக்கலாம் என்று கூறினர்.

சக்கந்தி வேங்கை பெரிய உடையணத் தேவர் சிவகங்கைக்கருகிலுள்ள சக்கந்தி நிலக்கிழாரில் ஒருவரான சக்கந்தித் தேவரின் மகனென்றும் செம்பிய நாட்டு கிளையைச் சேர்ந்த மறவர் என்பதால், திருமணம் செய்ய லாம் என்றும் மருது சகோதரர்கள் ஆலோ சனை கூறினர். ராணி வேங்கை பெரிய உடையணத் தேவருக்கு தனது மகள் வெள்ளச்சி நாச்சியாரைத் திருமணம் செய்து கொடுத்தார்.

இந்தத் திருமணத்திற்குப் பின்னர் ராணிக்குப் படமாத்தூர் கௌரி வல்லபத் தேவருடன்திருமணஉறவு ஏற்படவில்லையே என்ற ஆதங்கம் இருந்தது. இந்நிலையில் ராணி வேலுநாச்சியாருக்கும் மருது சகோதரர்களுக்குமிடையே பெருத்த கருத்து வேறுபாடொன்று உருவாகியது. ஒரு சமயம் சிவகங்கைச் சீமைக்கும், புதுக்கோட்டைத் தொண்டைமான் நாட்டிற்குமிடையே ஒரு சிறு எல்லைப் பிரச்சனை தோன்றியது. சிவகங்கைப் பிரதானி சின்னமருது, அந்த எல்லைப் பிரச்சினையில் ராணி வேலுநாச்சி யாரைக் கலந்து ஆலோசனை செய்யாமல், அவரது முன் அனுமதியைப் பெறாமல் தொண்டமான் நாட்டின் மீது படையெடுத் தார். தொண்டமான் நாட்டில் வாழ்பவர் களில் பெரும்பான்மையான மக்கள் கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்கள். அவர்களோடு சிவகங்கைச் சீமை மக்கள் திருமண உறவும், பல்வேறு தொடர்புகளும் கொண்டுள்ளதால் சிவகங்கைப் படையெடுப்பு கள்ளர் இன மக்களது விரோதத்தை வளர்க்கும் என்று ராணி கருதினார்.

1788ம் ஆண்டுராணி வேலு நாச்சியா ருக்கும், பிரதானி சின்ன மருதுவிற்கு மிடையேஇருந்த கருத்துவேறுபாடு உச்ச நிலையை அடைந்தது. சிவகங்கைச் சீமை யில் ராணி வேலுநாச்சியார் ஆதரவாளர் களென்றும் பிரதானி சின்னமருது ஆதரவா ளர்களென்றும் இருபிரிவுகள் தோன்றின. சிவகங்கைக் குடிமக்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்து அடிக்கடி தங்களுக்குள் சண்டை யிட்டுக் கொண்டனர்.

இதனையறிந்த ஆற்காடு நவாப், தனது பிரதிநிதியைச் சிவகங்கைக்கு அனுப்பி வைத்தான். அப்பிரதிநிதி ராணி வேலுநாச்சி யாரை சந்தித்துப் பேசினான். ராணியின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும், அவரது நிர்வாகத்திற்கு உதவுவதற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவும், ராணியும், நவாப்பும் ஓர் உடன்பாடுசெய்து கொண்டனர். அதனால் மருது சகோதரர்கள், ராணியின் பரிவாரங்களுடன் சண்டை யிட்டனர். அதன் காரணமாக ராணி வேலு நாச்சியார் சிவகங்கைக் கோட்டை வாசலை மூடிவிட்டு மிகப் பாதுகாப்பாகக் கோட்டைக் குள் தங்கியிருந்தார். 10-02-1789ல் ராணியின் பாதுகாப்பு தொடர்பாக நவாப், சென்னை கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

**அடுத்த இதழில் தொடரும்**

# கந்து வட்டிப் பிடியிலிருந்து திரையுலகம் மீளுமா?



தமிழ்த் திரையுலகை கந்து வட்டி என்ற வில்லனின் பிடியிலிருந்து மீட்க வேண்டும். அசோக்குமாரின் தற்கொலைக்குக் காரணமான அன்புச்செழியனை கைது செய்து கடும் தண்டனை பெற்றுத்தரவும், அவரது கடந்த கால அட்டகாசங்கள் குறித்து விசாரிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

திரைப்படத் தயாரிப்புக்காக கந்துவட்டிக்கு கடன் கொடுத்த அன்புச் செழியன் என்ற கந்து வட்டிக்காரர் அவமானப்படுத்தியதால், அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அசோக் குமார் என்ற தயாரிப்பாளர் தற்கொலை செய்து கொண்டதாக வெளியான செய்தி அதிர்ச்சியளிக்கிறது. பார்ப்பதற்கு பிரகாசமாக தெரியும் திரையுலகில் நடைபெறும் அதிர்ச்சிகரமான இருட்டு நிகழ்வுகளுக்கு இது ஒரு உதாரணமாகும்.

தமிழ்த் திரையுலகின் ஆகச் சிறந்த வில்லன் கந்துவட்டியும், கந்துவட்டிக்கு கடன் தருபவர்களும் தான். திரையுலகில் கதாநாயகனாக இருப்பவர்கள் கூட இந்த வில்லனிடம் கைக்கட்டித் தான் நின்றாக வேண்டும். இதற்கு முன் கடந்த **2003-ம்** ஆண்டு தமிழ்த் திரையுலகில் கொடி கட்டி பறந்த ஜி.வி என்ற தயாரிப்பாளர் கந்துவட்டிக்கு வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியாததற்காக இழைக்கப்பட்ட அவமானங்களை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார். அவரைப் போலவே இப்போது அசோக் குமாரும் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

இந்த இரு நிகழ்வுகளுக்கு இடைப்பட்ட 15 ஆண்டுகளில் கந்துவட்டியால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிகமாக இருக்கும். ஆனால், அவர்கள் அவ்வளவு பிரபலமானவர்கள் இல்லை என்பதால் அதுகுறித்த விவரங்கள் வெளிவரவில்லை. தயாரிப்பாளர்கள் ஜி.வி., அசோக்குமார் ஆகிய இருவரின் தற்கொலைகளுக்கும் மூல காரணமாக இருந்தவர் அன்புச் செழியன் தான் என்று கூறப்படுகிறது.

ஆனாலும், அவர் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. ஜி.வி தற்கொலைக்காக அவர் மீது வழக்கு கூட பதிவு செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது. அன்புச்செழியனின் கொடுமையால் ஏராளமான தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் மற்றும் தாநாயகர்கள் அவமதிப்புக்கும், தாக்குதலுக்கும் ஆளாகியிருக்கின்றனர். மதுரையில் ஒரு தயாரிப்பாளர் அளித்த புகாரின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டாலும் கூட அவருக்கு எதிரான வழக்கு வலுவிழக்கச் செய்யப்பட்டு விட்டது.



அசோக்குமார்

இத்தனைக்கும் காரணம் இருதிராவிடக் கட்சிகளையும் சேர்ந்த முக்கியப் புள்ளிகளின் கருப்புப் பணத்தை திரையுலகில் முதலீடு செய்து பெரும் லாபம் ஈட்டித் தரும் பணியை அவர் செய்து வந்தது தான் எனக் கூறப்படுகிறது.

இப்போது கூட அசோக்குமார் தற்கொலை செய்து கொண்டது தொடர்பாக அன்புச் செழியன் மீது மிகவும் சாதாரணப் பிரிவில் தான் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அசோக்குமாரின் தற்கொலைக்கு காரணம் கந்துவட்டித் தான் என்பது ஒட்டுமொத்த தமிழகத்திற்கே தெரிந்திருந்தாலும் அதற்கு காரணமானவர் மீது கந்துவட்டிச் சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப் படவில்லை.

இத்தனைக்கும் காரணம் தமிழக அமைச்சராக இருக்கும் உத்தமர் ஒருவரின் தலையீடு தான் என்று கூறப்படுகிறது. தர்மயுத்தம் நடத்திய அந்த அமைச்சரின் வாரிசு மூலம் பலநூறு கோடி

கருப்புப்பணம் திரையுலகில் முதலீடு செய்யப் பட்டிருப்பதாகவும் அப்பணத்தை அன்புச்செழி யன் தான் நிர்வகித்து வருவதாகவும் கூறப்படு கிறது. அதனால் அசோக்குமார் தற்கொலை வழக்கிலும் அவர் மீது நடவடிக்கை பாயாது என்றே தெரிகிறது.

அதேநேரத்தில் கசப்பான இன்னொரு உண்மையையும் கூறித் தான் ஆக வேண்டும். திரைத்துறையினரின் சரியான திட்டமிடல் இல்லாமை, பிரபலங்களின் பின்னால் ஓடும் வழக்கம், ஓடும் குதிரை மீது பணம் கட்டும் சூதாட்ட குணம் போன்றவை தான் கந்துவட்டி எனப்படும் புதைகுழியில் தயாரிப்பாளர்கள் சிக்கிக் கொள்வதற்கு முக்கியக் காரணமாகும்.

தமிழ்த் திரையுலகச் சந்தையில் ஒரு திரைப் படம் எவ்வளவு தான் வெற்றிகரமாக ஓடினா லும் ரூ.100 கோடி வசூல் ஈட்ட வாய்ப்பில்லை என்பது நன்றாகத் தெரிந்தும், கதையை நம்பாமல், கதாநாயகனை மட்டும் நம்பி ரூ.200 கோடி, ரூ.300 கோடிக்கு படம் எடுப்பது எந்த வகையில் புத்திசாலித்தனமாக இருக்கும்.

இது விளக்கைத் தேடி விழுந்து அழியும் விட்டில் பூச்சியின் செயலுக்கு இணையானது தானே? அண்மைக்காலங்களில் மிகப்பெரிய முதலீட்டில் திரைப்படம் தயாரித்து, அது தோல் வியடைந்ததால் வாழ்நாள் முழுவதும் ஈட்டி யதையெல்லாம் இழந்து, கடன் என்ற கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் திரைப்படத் தயாரிப்பாளர்களை நான் அறிவேன்.

தமிழ்த் திரையுலகில் கடந்த சில ஆண்டு களில் கதையை நம்பி ஓரிரு கோடி ரூபாய் முதலீட்டில், முகம் தெரியாத கலைஞர்களை வைத்து தயாரிக்கப்பட்ட ஏராளமான திரைப் படங்கள் பல மடங்கு லாபத்தைக் கொடுத்துள் ளன. திரைத்துறை என்பது ஒரு சில தயாரிப் பாளர்கள், இயக்குனர்கள் மற்றும் நடிகர்களு டன் முடிந்து விடுவதில்லை.

அத்துறையை நம்பி பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் உள்ளன. அவர்களின் நலனுக்காக திரைத்துறை உயிர்ப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக அத்துறையை சூதாட்டமாக கருதாமல் தொழிலாகவும், வணிக மாகவும் நடத்த வேண்டும்.

திரைத்துறை தொழிலாக அங்கீகரிக்கப்பட்டு, அதற்கு வங்கிக் கடன் வழங்க வகை செய்யப் பட்டுள்ளது. திரைப்படம் தயாரிக்க வங்கிகள் விதிக்கும் நிபந்தனைகளில் மிகவும் முக்கியமா னது படத்தயாரிப்பு செலவுகளில் வெளிப் படைத் தன்மை தேவை என்பது தான். ஆனால், துரதிருஷ்டவசமாக பெரும்பாலான தயாரிப்பா ளர்கள் வங்கிக்கடன் பெற முயலாமல் கந்துவட் டிக்கு கடன் வாங்கி கண்ணீரில் மிதக்கின்றனர்.

இந்த நிலையை மாற்றி திரைத்துறையினர் தங்களுக்குள் விவாதித்து திரைப்படத் தயாரிப்புச் செலவை குறைத்தல், பொதுத்துறை வங்கிகளில் கடன் பெறுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலம் தமிழ்த் திரையுலகை கந்துவட்டி என்ற வில்லனின் பிடியிலிருந்து மீட்க வேண்டும். அசோக்குமாரின் தற்கொலைக்குக் காரணமான அன்புச்செழியனை கைது செய்து கடும் தண்டனை பெற்றுத்தரவும், அவரது கடந்த கால அட்டகாசங்கள் குறித்து விசாரிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

**- சரவணன்**

## நாயகர்கள் திருந்த வேண்டும்!

சினிமாவைச் சூதாட்டம் ஆக்கிக்கொண்டி ருப்பதில் அவர்களுக்குப் பங்கிருக்கிறது இல்லையா? இரண்டு படம் ஜெயித்துவிட்டால், சம்பளத்தை 100%, 200% ஆக நாயகர்கள் உயர்த்திக்கொள்கிறார்களே, அந்த மாயா ஜாலத்தை நிறுத்த வேண்டும்.

தயாரிப்பாளர் கொஞ்சம் நயமானவராகச் சிக்கிவிட்டால், தன் மனம் போன போக்கில், படத்தின் திரைக்கதையை வளைத்து, ஷூட்டிங் ஸ்பாட்டில் உட்கார்ந்துகொண்டு படத்தைத் தன் போக்குக்கு ஏற்ப இழுத்து, தயாரிப்புச் செலவை ஒன்றுக்கு இரண்டாக்கி அந்தத் தயாரிப்பு நிறுவனத்தையே போண்டி ஆக்கும் இயக்குநர் கள், நடிகர் - இயக்குநர்கள் திருந்த வேண்டும்.

உண்மையான தயாரிப்பாளர்களை இல்லா மல் ஆக்கி, விநியோகஸ்தர் என்ற வலைப் பின்னலையும் அழியவிட்டு, நேரடியாக டிஷ்டி பூட்டர்களோடு இண்டஸ்ட்ரி கொண்ட உறவின் வெளிப்பாடுகளில் ஓங்கி வளர்ந்ததுதானே அன்புச்செழியன் வகையறா? திரைத்துறைக் கந்துவட்டிக் காரர்கள் ஒழிய வேண்டுமானால், நீங்கள் உங்கள் திரைத் துறையை முதலில் சரிசெய்யுங்கள்.

‘கந்துவட்டிக்காரர்கள்’ கையில் பிடித்துக் கொடுத்தது யார்? அதற்கான முதல் பொறுப் பாளிகள் அதிநாயக நடிகர்கள்! தமிழ் சினிமாவை முதலில் நாயகர்களிடமிருந்து தான் மீட்டுக் காக்க வேண்டும்!

# மக்கள் விசாரணை (மாதஇதழ்)

## சந்தாதாரர் ஆக வேண்டுமா?

கீழ்கண்ட சந்தா படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான சந்தாவை
குறிப்பிட்டுக் கிழே உள்ள விலாசத்துக்கு அனுப்பவும்.

### சந்தா படிவம்

பெயர் : ....................................................................................................

முழு முகவரி : ....................................................................................................

....................................................................................................

தொலைபேசி எண். : ....................................................................................................

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 110/- | ☐ |
| மூன்று ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 360/- | ☐ |
| ஓர் ஆண்டு சந்தா (வெளிநாடு) | ரூ. 1000/- | ☐ |

**MAKKAL VISARANAI, Current A/C. 14920200000953, IFSC Code IOBA0001492, Indian Overseas Bank, K.K. Nagar Branch** என்ற வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தி ரசீதை ஜெராக்ஸ் அனுப்பினால் போதுமானது.

மேலும் விபரங்களுக்கு

**மக்கள் விசாரணை** (மாத இதழ்)

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
Email : news@makkalvisaranai.com போன் : 044 - 4354 2611, செல் : 93821 33334

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

# மக்கள் விசாரணை

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. **Email : news@makkalvisaranai.com**
போன் : 044 - 4354 2611, செல் : 93821 33334



# கீரையை எப்படிப் பார்த்து வாங்குவது?

கீரைகள் வாங்கவே பயமாக இருக்கிறது. இருப்பதிலேயே அதிக கெமிக்கல் தெளிக்கப்படுவது கீரைகளில்தான் என்று கேள்விப் படுகிறோம். எல்லோராலும் ஆர்கானிக் கீரை வாங்கவோ, வீட்டிலேயே கீரை வளர்க்கவோ முடியாத நிலையில் பாதுகாப்பான கீரையை எப்படிப் பார்த்து வாங்குவது? கீரை சமைக்கும் முன் எப்படி சுத்தப்படுத்த வேண்டும்?

**தாவரவியல் பேராசிரியர் டாக்டர் ராஜேஷ் கூறுகிறார்...**

ஆரோக்கிய வாழ்விற்கு தேவையான சரிவிகித உணவினை பூர்த்தி செய்வதில் கீரைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உடலுக்குத் தேவையான தாதுக்கள், வைட்டமின்கள் மற்றும் புரதங்களைப் பெற கீரைகளை தினசரி உணவில் சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

கீரைகளின் நன்மைகளைப் பற்றிப் பேசும் போது அதன் வளர்ப்பின்போது உபயோகப் படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள், பூஞ்சைக் கொல்லிகள், களைக்கொல்லிகள் போன்ற ரசாயனங்களால் ஏற்படும் தீமையும் நம் நினைவுக்கு வந்து நம்மை பயமுறுத்தும். மேலும் எல்லோராலும் இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட கீரைகளை வாங்குவது சாத்தியமானது அல்ல.

எனவே, கீரைகளின் மேல் பகுதியில் இருக்கும் இத்தகைய ரசாயனங்களில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியம். சில சிறிய செயல்முறைகளின் மூலம் மேற்கூறிய ரசாயனங்களை கீரையிலிருந்து எளிதில் களைய முடியும்.

கீரைகளை வாங்கும்போது ஆரோக்கியமானவையாக பார்த்து வாங்க வேண்டும். வெள்ளை அல்லது துரு போன்ற புள்ளிகளோ, கோடுகளோ அல்லது துகள்களோ இருப்பின் அவை பூஞ்சை அல்லது பூச்சிகளின் முட்டையாக இருக்கலாம்.

எனவே அவற்றை நீக்கி விட வேண்டும். முதலில் கீரைகளை சுத்தமான நீரில் கழுவ வேண்டும். பின்னர் உப்பு நீரில் (2g/100ml) இரண்டு அல்லது மூன்று முறை கழுவ வேண்டும். குளிர்ந்த நீரில் கழுவுவதன் மூலம் 70-80% ரசாயனங்களை நாம் அகற்ற முடியும். பின்னர் வெதுவெதுப்பான நீரில் கழுவுவது அல்லது நீராவியில் வேக வைப்பது போன்றவையும் இந்த ரசாயனங்களை களைய உதவும்.

2 அல்லது 3 டீஸ்பூன் வினிகரை நீரில் கலந்து 15-20 நிமிடங்கள் அதில் ஊற வைத்து சமைக்கும் போது ரசாயனங்கள் பெருமளவு நீங்கி விடும். மேலும் ஒரு டீஸ்பூன் எலுமிச்சைச் சாறுடன் ஒரு டீஸ்பூன் சமையல் சோடா மற்றும் ஒரு கப் நீர் சேர்த்து தயாரிக்கும் எளிய கலவையில் 5-10 நிமிடங்கள் ஊற வைத்து பின் நல்ல நீரில் கழுவுவதன் மூலமும் ரசாயனங்களை உணவுப் பொருட்களிலிருந்து நீக்கலாம்.

கீரைகளை நன்கு கழுவிய பின்னரே நறுக்க வேண்டும். நறுக்கிய பின் கழுவும் போது அதிலுள்ள சத்துகளை வெகுவாக இழக்கிறோம். கீரையை வேக வைத்த நீரினை சாம்பார் போன்ற பதார்த்தங்கள் செய்ய பயன்படுத்துவதன் மூலம் அதிலுள்ள சத்துகள் வீணாகாமல் பெற முடியும்.

**– சங்கர்**



# ரத்த அழுத்தம்

# புதிய கோட்பாடுகளும் பூதாகர சிக்கல்களும்!

உயர் ரத்த அழுத்தம் எனும் நோய் உங்களுக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். இந்த வாரம் நீங்கள் மருத்துவரிடம் சென்றால், உங்களுக்கு அந்த நோய் உள்ளதாகச் சொன்னால் அதிர்ச்சி அடையாதீர்கள். இன்னொரு மருத்துவரிடம் 'செகண்ட் ஒப்பீனியன்' கேட்பதற்கு மற்றொரு மருத்துவமனைப் படி ஏறாதீர்கள். ஏனெனில், உங்களுக்கு உயர் ரத்த அழுத்தம் உள்ளதாக அவர் சொல்லவில்லை; அப்படிச் சொல்லச் சொல்கிறது அமெரிக்க இதயநல மருத்துவர்கள் சங்கம் (American Heart Association).

மருத்துவ விஷயங்களைப் பொறுத்தவரை நோய்களைத் தீர்மானிப்பதிலும், சிகிச்சை நெறி முறைகளை வழிகாட்டுவதிலும் உலக அளவில் கோலோச்சிக்கொண்டிருப்பது அமெரிக்கா தான். அங்கு பலதரப்பட்ட நோய்கள் தொடர்பாகவும் புதிய மருந்துகள் கண்டுபிடிப்பு குறித்தும் அரசும் தனியார் மருந்து நிறுவனங்களும் போட்டி போட்டுக்கொண்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதால், அடிக்கடி அங்கு 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' நிகழ்வது வழக்கம். அந்த வழியில் சென்ற வாரம் ஒரு புதிய தகவல் வந்திருக்கிறது.

இதுவரை 140/90 மிமீ. பாதரச அளவு என்று இருந்த உயர் ரத்த அழுத்தத்துக்கான உச்ச வரம்பை 130/80 மிமீ. பாதரச அளவு என்று குறைத்துவிட்டது அமெரிக்கா. இதன் விளைவாக, நீங்கள் மட்டுமல்ல, உலகில் பல கோடிப் பேர் திடீரென்று ஒரே நாளில் ரத்த அழுத்த நோயாளிகளாகிவிட்டனர்.

**ரத்த அழுத்தம் என்றால் என்ன?**

ஆற்றில் தண்ணீர் ஓடுவதுபோல நம் ரத்தக் குழாய்களில் ஓடிக்கொண்டிருக்கிறது ரத்தம். அப்படி ஓடுவதற்கு ஓர் அழுத்தம் தேவை. அந்த அழுத்தத்துக்குப் பெயர்தான் ரத்த அழுத்தம் (Blood pressure).

பொதுவாக, ஒருவருக்கு ரத்த அழுத்தம் 120/80 மி.மீ. பாதரச அளவு என்று இருந்தால், அது வழக்கமானது. இதில் 120 என்பது சிஸ்டாலிக் அழுத்தம் (Systolic pressure). அதாவது, இதயம் சுருங்கி ரத்தத்தை உடலுக்குத் தள்ளும்போது ஏற்படுகின்ற அழுத்தம் இது. 80 என்பது டயஸ்டாலிக் அழுத்தம் (Diastolic pressure). அதாவது, இதயம் தன்னிடம் இருந்த ரத்தத்தை வெளியேற்றிய பிறகு, தன் அளவில் விரிந்து உடலில் இருந்து வருகின்ற ரத்தத்தைப் பெற்றுக்கொள்கிறது. அப்போது ஏற்படுகின்ற அழுத்தம் இது.

ஆனால், ரத்த அழுத்தம் எல்லோருக்குமே சொல்லிவைத்ததுபோல் 120/80 என்று இருக்காது. உடல், எடை, உயரம் போன்றவை வித்தியாசப்படுவதுபோல, சிஸ்டாலிக் அழுத்தமும் டயஸ்டாலிக் அழுத்தமும் வித்தியாசப்படலாம். ஆகவேதான், உலக சுகாதார நிறுவனம் ( கீபிளி ) ஒரு நபருக்கு 100/70 மி.மீ முதல் 140/90 மி.மீ. வரை உள்ள ரத்த அழுத்தத்தை வழக்கமானது

என்றும், இது 140/90 மி.மீ.க்கு மேல் அதிகரித்தால் அதை 'உயர் ரத்த அழுத்தம்' (High blood pressure); 100/70 மி.மீட்டரைவிடக் குறைந்தால் அதை 'குறை ரத்த அழுத்தம்' (Low blood pressure) என்றும் வரையறுத்தது.

சமீபத்தில், அமெரிக்க இதயநல மருத்துவர்கள் சங்கம், அந்நாட்டின் இதயநோய் ஆராய்ச்சிக் கல்லூரி (American College of Cardiology) மற்றும் தனியார் ஆராய்ச்சி மையங்கள் இணைந்து ஓர் ஆராய்ச்சியை மேற்கொண்டன. அதாவது, தொற்றா நோய்கள் என அழைக்கப்படும் நீரிழிவு, பக்கவாதம், மாரடைப்பு, சிறுநீரக நோய்கள் போன்றவற்றால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ அறிக்கைகளைக் கூர்ந்து கவனித்தபோது, 130/80 மிமீ. பாதரச அளவுக்கு அழுத்தம் கொண்டவர்களுக்கும் மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரகப் பாதிப்பு ஆகிய பிரச்சினைகள் தோன்றுவது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இந்த நிலைமையைத் தடுக்க உயர் ரத்த அழுத்தத்தின் உச்சவரம்பை 140/90 மி.மீ.லிருந்து 130/80 மி.மீ.க்குக் குறைத்து விட்டனர். இதன்படி, அமெரிக்காவில் மட்டும் 32% ஆக இருந்த ரத்த அழுத்த நோயாளிகளின் எண்ணிக்கை 46% ஆக அதிகரித்துவிட்டது.

உயர் ரத்த அழுத்தத்தின் பழைய உச்ச வரம்பின்படியும், இந்தியாவில் 2014-ல் எடுத்த புள்ளிவிவரப்படியும் 33 கோடிப் பேர் ரத்த அழுத்த நோயாளிகளாக இருந்துவந்தனர். இப்போதைய புதிய அறிவிப்பின்படி இந்த எண்ணிக்கையில் புதிதாக 7 கோடிப் பேர் சேர்ந்துள்ளனர். இவர்களும் இப்போது உயர் ரத்த அழுத்தத்துக்கான மாத்திரைகள் எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின்றனர்.

ஒருமுறை இந்த மாத்திரைகளை எடுத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டால், வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து எடுக்க வேண்டும். அப்படி மருந்து எடுக்க ஆரம்பிப்பதற்கு முன்பு அமெரிக்க நிபுணர்களின் இந்தப் பரிந்துரை இந்தியச் சூழலுக்கு சரிவருமா என்று யோசிக்க வேண்டியது இருக்கிறது.

தனி மனிதரின் ரத்த அழுத்தம் நாட்டின் தட்பவெப் பம், வாழும் இடம், வயது, வாழ்க்கை முறை, உணவு முறை,, உளவியல் சிக்கல்கள், பரம்பரைத் தன்மை, உடலில் காணப்படும் பிற நோய்கள் என பல்வேறு அடிப்படைக் கூறுகள் உள்ளன. இவை நாட்டுக்கு நாடு மாறுபடும். இந்தியர்களின் உயர் ரத்த அழுத்தத்தின் உச்ச வரம்பை இந்திய மருத்துவர்களும் ஆராய்ச்சியாளர்களும்தான் தீர்மானிக்க வேண்டும். அதுதான் பொருத்தமாக இருக்கும்.

அடுத்து, உயர் ரத்த அழுத்தத்தில் 'வெள்ளைக் கோட்டு நோயியம்' (White coat syndrome) என்று ஒன்று உண்டு. அதாவது, சில பயனாளிகள் மருத்துவரிடம் வரும்போது பரிசோதித்தால் ரத்த அழுத்தம் 130/90 எனச் சிறிது கூடுதலாக இருக்கும். இது அச்சத்தின் விளைவாக ஏற்படுவது. வீட்டுக்குச் சென்றதும் இது 120/80 என்று இயல்பாகிவிடும். இவர்களுக்கு சிகிச்சை தேவையில்லை. இனி, இந்த மாதிரியானவர்களையும் ரத்த அழுத்த நோயாளிகளாக அறிவித்து, மாத்திரைகளைப் பரிந்துரைக்க இந்தப் புதிய அறிவிப்பு வசதிசெய்து தருகிறது.

வெளிநாடுகளில் மக்களின் மருத்துவச் செலவை மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்வதால் பணப் பிரச்னை இல்லை. ஆனால், இந்தியாவில் அப்படியில்லை. ரத்த அழுத்த நோய் அடித்தட்டு மக்களுக்கும் உள்ளது. ஏற்கெனவே, இந்தியச் சாமானியர்கள் மருத்துவத்துக்காகப் பெரும் தொகையைக் கடன் வாங்கியே செலவிட நேர்கிறது. இதனால், இது வாழ்வாதாரப் பிரச்சினையும் ஆகிறது.

முன்பு நீரிழிவு நோய்க்கான ரத்த சர்க்கரை சராசரி அளவைக் குறைத்தார்கள். அதனால் நீரிழிவு நோயாளிகள் இந்தியாவில் அதிகரித்தனர். கொழுப்பின் அளவைக் குறைத்தார்கள். அதனால், ரத்தக் கொழுப்பு அதிகமுள்ளவர்கள் அதிகரித்தனர். இந்த நோய்களுக்கான மாத்திரைகளின் வணிகம் உச்சத்துக்குச் சென்றது. இப்போது ரத்த அழுத்த அளவைக் குறைத்திருக்கின்றனர்.

இனி, இந்தியாவில் ரத்த அழுத்த நோயாளிகளும் அதிகரித்திருப்பதாக அறிவித்து அதற்கான மாத்திரை, மருந்து வணிகத்தைக் கூட்டுவார்கள். இது அயல்நாட்டு மருந்து நிறுவனங்களின் வாயில் சர்க்கரை போட்டதுபோல் ஆகிவிடும்.

எனவே, இந்த விஷயத்தில் மத்திய அரசு உடனடியாகத் தலையிடுவது அவசியம். தேவையான நிதியை ஒதுக்கி ஆராய்ந்து, இந்திய மருத்துவர்களுக்குச் சரியான பாதையைக் காட்ட வேண்டும். மக்களும் மருத்துவர்களும் எதிர்பார்ப்பது இதைத்தான்! **- வி. அருணாசலம்**



# பெற்றோரின் எதிர்ப்பார்ப்பும் தவறல்ல !

நம்பிக்கை என்பது தானாகவே நிகழ்கிறதா, புரிதல் என்பது நிகழ்ந்த பின்பு நம்பிக்கை ஏற்படுகிறதா என்கிற சர்ச்சை வெகு காலமாக இருந்துவந்திருக்கிறது. கணித மேதையும் இயற்பியல் விஞ்ஞானியுமான பிரெஞ்சு தத்துவச் சிந்தனையாளர் ரெனே தெக்கார்தே (Rene Descartes), "புரிந்துகொள்வதும் நம்புவதும் வெவ்வேறு முறைகளில் நிகழ்கின்றன. கவனிப்பதன் மூலம் மக்கள் ஒரு செய்தியை அறிந்துகொள்கிறார்கள்.

அதற்குப் பிறகு அந்தச் செய்தியை அலசி ஆராய்ந்து, ஏற்றுக்கொள்ளவோ விலக்கவோ செய்கிறார்கள். ஏற்புடைய செய்தி நாளடைவில் நம்பிக்கையாக மாறுகிறது" என்றார். இதற்கு மாறாக, டச்சுத் தத்துவவாதியான பரூச் ஸ்பி னோஸா, ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ளத் தொடங்கும்போதே, அதை நம்ப ஆரம்பித்து விடுவது நிகழ்கிறது என்றார். ஒரு நபர் ஒரு கருத்தைப் பின்னாளில் மாற்றிக்கொள்ள நேரிட்டாலும் அதுவரை அவர் அந்தச் செய்தியில் நம்பிக்கை வைத்திருந்தார் என்று தத்துவ விசாரணை செய்தார்.

இதைப் பரிசோதித்து உண்மையைக் கண்டறிய அமெரிக்க உளவியலாளர் டேனியல் கில்பெர்ட் முடிவெடுத்தார். இந்தச் சோதனையில் ஈடுபட 71 பேர் முன்வந்தனர். அவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தார். இரண்டு கொள்ளைகளைப் பற்றிய செய்திகளை அவர்கள் படித்த பின் அவர்கள் அந்தக் கொள்ளையில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

அவர்களுடைய மனப்போக்கை மாற்ற, நடுநடுவே பொய்யான செய்திகளும் அவர்கள் படிக்க வேண்டிய விஷயத்தில் இணைக்கப்பட்டன. உதாரணத்துக்கு, படிப்பவர்களின் கோபத்தை அதிகரிக்க, 'அந்தக் கொள்ளையர்கள் துப்பாக்கியை வைத்திருந்தார்கள்' என்றும், படிப்பவர்களின் மனதில் இரக்கத்தை ஏற்படுத்த, 'கொள்ளையர்களுக்குப் பசியால் வாடும் சில குழந்தைகள் இருந்தார்கள்' என்கிற செய்தியும் இணைக்கப்பட்டது.

ஒரு பிரிவினருக்கு உண்மையான செய்திகள் பச்சை வண்ணத்திலும் பொய்யான செய்திகள் சிவப்பு வண்ணத்திலும் கொடுக்கப்பட்டன. இன்னொரு பிரிவினருக்கு வண்ணங்கள் ஏதுமின்றிப் பொய்யான விஷயங்கள் உண்மை செய்திகளுடன் சேர்த்துத் தரப்பட்டன.

வண்ணங்களால் வேறுபடுத்தப்படாத பொய்யான செய்தியை வாசித்தவர்கள், வாசித்த செய்தியை நம்பிக் கொள்ளையடித்த குற்றவாளிகள் மீது உடனடியாக அனுதாபம் அல்லது கோபம் தெரிவித்தனர். வண்ணங்களால் பிரிக்கப்பட்ட செய்திகளை வாசித்தவர்கள், கிட்டத்தட்ட 6 வருடத்திலிருந்து 11 வருடங்கள் வரை தண்டனை கொடுத்திருந்தனர்.

ஆனாலும், இரு குழுக்களுமே நிர்ணயித்த தண்டனையில் மிகப் பெரிய வித்தியாசம் இல்லை.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால், நேரம் கிடைக்கும்போது மனிதர்கள் யோசித்துத் தங்கள் கருத்துகளை அல்லது நம்பிக்கைகளை

மாற்றிக்கொள்கின்றனர். ஆனாலும் ஸ்பினோஸா வாதிட்டதுபோல முதன்முதலாகப் படிக்கும்போது அல்லது அறியும்போது, நம்பிக் கைகொள்வதும் நிகழ்ந்துவிடுகிறது. இதைப் புரிந்துகொண்டோம் என்றால் ஒரு சாதாரண எண்ணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது அது நம்பிக்கையாக மாறுகிறது என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

அறிவியல் தேர்வில் ஒருமுறை தோல்விய டையும் மாணவர், தனக்கு விஞ்ஞானமே வராது என்கிற முடிவுக்கு வந்துவிடுகிறார். ஆனால், தொலைத்த இடத்தில் பொருளைத் தேட வேண் டும் என்பதைப் போல், எதில் தோல்வியடைந் தோமோ மறுபடியும் அதையே மேற்கொள்ள வேண்டும். சரித்திரம் வெற்றி பெற்றவர்களால் எழுதப்படுகிறது என்று ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால், வெற்றி பெற்றவர்களின் விலாசங்களை விசாரிக்கும்போது, அவர்கள் தொடர் தோல்வி களை மீறித்தான், வாகை சூடியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

**எப்படி நம்பிக்கை வளர்ப்பது?**

*1.* எல்லா நிலைகளிலும் நம் எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில்லை.வெற்றிபெற்ற தருணங் களைவிட, தோல்வியடைந்த சம்பவங்களை ஆய்வுக்கு உள்ளாக்குவது நல்லது.

*2.* திடீர் வெற்றி என்று எதுவுமில்லை. பல தோல்விகளைக் கடந்துதான்,வெற்றி ஒருவரைச் சந்திக்கிறது.

*3.* நட்புவட்டத்தை விரித்துக்கொள்வதன் மூலம், ஆழமான வாசிப்பின் மூலம் மற்றவர்களின் அனுபவங்கள், அவர்கள் அடைந்த தோல்வி களைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியும்.

கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்கள் கொண்ட பிரிவை பிளஸ் டூவில் படித்து வருகிறேன். என்னுடைய வகுப்பில் முதல் மூன்று இடங்களில் வருவேன். ஆர்க்கிடெக்ட் ஆக ஆசை. ஆனால், மருத்துவம் படிக்க முயலும்படி அப்பா வற்புறுத்துகிறார். அதிலும் எனக்கு விருப்பமிருக்கிறது. இதனால், ஒரே குழப்பமாக இருக்கிறது.

பொதுவாக இத்தகைய கேள்விகள் பணி வாழ்க்கைத் தொடர்பானதாக மட்டுமே கருதப் படுகின்றன. ஆனால், இதில் நம் மனதைப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் மிகவும் உள்ளது. எந்தப் படிப்பைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பம் இந்த வயதில் வருவது சகஜம்தான். தங்களால் படிக்க முடியாத ஒரு கல்வியை, தங்கள் குழந்தைகள் பெற வேண்டும் என்கிற பெற்றோரின் எதிர்பார்ப்பைத் தவறாகக் கருத வேண்டியது இல்லை. குழந்தைகளுக்கு பிடிக் காத, அவர்கள் மறுக்கும் படிப்பைத் திணிப்பது தான் தவறான விளைவுகளை உண்டாக்கும்.

உங்களுடைய கேள்வியிலிருந்து தெரிகிறது, மேற்படிப்பைப் பொறுத்தவரை நீங்கள் இன்ன மும் எந்த முடிவுக்கும் வரவில்லை. கணிதமும் உயிரியலும் உங்களின் பாடத்திட்டத்தில் இருப் பதால், இரண்டு விதமான நுழைவுத் தேர்வு களையும் உங்களால் எழுத முடியும்.

உதாரணத்துக்கு, ஒருவருக்குப் பொறியியல் படிப்பு மீது அதீத ஆர்வம் இருந்து, பெற்றோ ரின் வற்புறுத்தலால் வெறுப்போடு மருத்துவப் படிப்பில் சேர்கிறார் என்று வைத்துக் கொள் வோம். அந்த அதீத வெறுப்பில், ஆர்வம் குறைந்து, அவருடைய கவனம் சிதறுவதற்கு வாய்ப்புண்டு. அந்த நிலை உங்களைப் பொறுத்தவரை இல்லை. நீங்கள் இரண்டு படிப்பிலும் சோபிக்க முடியும். குழம்பாமல், இரண்டு விதமான நுழைவுத் தேர்வுகளையும் எழுதுங்கள். பிறகு முடிவு செய்யுங்கள்.

**சரியான முடிவை எடுப்பது எப்படி?**

*1.* மனதை எதற்கும் ஏற்ற நிலையில் வைத் திருங்கள். கடலில் இருக்கும் திமிங்கிலமாக மட்டும் இருக்க விரும்பாமல், எல்லா நீர்நிலை களிலும் பிரவேசிக்கும் சிறு மீன் போன்று இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

*2.* சில நேரம், நீரை எதிர்த்து நீச்சலடித்துச் செல்வதைவிட, நீரின் போக்கிலேயே நகருவது நல்லது.


*3.* வீட்டின் கீழ்த்தளத்தைக் கட்டி முடித்து விட்டு அதற்கு மேலே முதல் தளம் எழுப்பு வதைப் போல, ஓரளவு பாதுகாப்பான நிலையை அடைந்த பிறகு, நம் ஆசைகளை, கனவுகளை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபடலாம்.

*4.* விடாமுயற்சி, திறமை, சரியான சந்தர்ப் பங்களில் ஒரு தீர்க்கமான முடிவு, சந்தர்ப்பங்கள் அனுகூலமாக இல்லாதபோது அதனை ஏற்றுக்கொள்வது போன்ற நிலைப்பாட்டில் மனதுக்கு எந்தத் துக்கமுமில்லை.

*5.* இறுதி முடிவு என்று எதுவுமில்லை. எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இருந்தால், எந்தவிதமான கல்வியும் நமக்குப் பலனளிக்கும்.

**- வீ.வடிவேல்**

## கவிதை பக்கம்



# கும்பிடும் வரை கடவுள்..!

கல்லுக்கு உருவம் கொடுக்கும் வரை
நான் சிற்பி, நீ கல்.,
உருவம் கொடுத்த பின்பு
நீ கடவுள், நான்
தீண்டத்தகாதவன்..!

கும்பிடும் வரை கடவுள்;
திருட்டுப் போனால் சிலை !!

தெருவில் குப்பை போடுகிறவனை
மரியாதையாகவும்
அதை பொறுக்கி சுத்தம் செய்பவனை
கேவலமாக பார்க்கும்
சமுதாயம் உள்ளவரை நாடு
சுத்தம் ஆகாது!!!

வேலைக்குப் போகிறவர்களின்
திங்கட் கிழமையை விட
வேலை கிடைக்காதவர்களின்
திங்கட் கிழமைகள் கொடூரமானவை. !!

அவசரத்துக்கு ஒரு
கொத்தனாரைக் கூட தேடுனா
ஊர்ல ஒரு பய இல்ல,
தெருவுக்கு நாலு இஞ்சினியர்
மட்டும் இருக்கானுங்க !!
ஏன் இந்த கொடுமை..!!!

இவன் என்ன நினைப்பான்
அவன் என்ன நினைப்பான்னு
நினைச்சே வாழ்றோம்.
ஆனா உண்மையில
ஒருத்தனும் நம்மளைப் பத்தி
நினைக்கிறதேயில்ல!.

இந்த டாக்டர்கள்
வசதி இல்லாதவன பாத்து
அது சாப்புடு இது சாப்புடுனு
சொல்லுவான். ஆனா
வசதி இருக்கவன பாத்து
எதையும் சாப்புடகூடாதுனு
சொல்லுவான்.!

இறுதி வரை வாழ்க்கை
இப்படியே இருக்க வேண்டுமே
என்ற கவலை சிலருக்கு,
இப்படியே இருந்துவிடுமோ
என்ற கவலை சிலருக்கு!!

250 ரூபாய்க்கு பளிச்சென்றும்
100 ரூபாய்க்கு சுமாராகவும்
இலவச தரிசனத்திற்கு
படுமங்கலாகவும்
காட்சி தருகின்றார் கடவுள்...!!

தூக்கம் வராமல் முதலாளி...
தூங்கி வழியும் வாட்ச்மேன்.
என்ன ஒரு முரண்பாடு..!!!

கடவுளுக்கு
நீங்களாகவே ஒரு உருவம்
கொடுத்து விட்ட படியால்..
கடவுள் உங்கள் எதிரில் இருந்தாலும்
உங்களுக்கு தெரிவதில்லை..!!!

- கவிஞர் நிவேதிதா

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

மற்றும்

# சென்னை, எழும்பூர் அரசு கண் மருத்துவமனை

இணைந்து நடத்தும்

# மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம்

நாள் : 10-12-2017 ஞாயிற்றுக்கிழமை

இடம் : R.V.K இல்லம், (முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர்)

நெ.1/268, ராஜீவ்காந்தி சாலை, படூர், (OMR) சென்னை-603 103.

நேரம்: காலை 9-00 மணிமுதல் மாலை 3-00 மணிவரை

**தலைமை :**

திரு. **K. பாலாஜி** அவர்கள் (துணை ஆசிரியர்-மக்கள் விசாரணை)
மாநில துணை தலைவர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

**முன்னிலை**

திரு. **காசி. அரங்கநாதன்**, அவர்கள்
மாநில தலைவர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

திரு. முனைவர் **ஆ. மவுரியன்**, அவர்கள்
மாநில பொதுச் செயலாளர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

**முகாமினை துவக்கி வைப்பவர்**

திரு. **I. விஜயன்**, I.I.S., அவர்கள்
Co - DIRECTOR REGISTRAR NEWS PAPER OF INDIA

**முகாமின் சிறப்பு மருத்துவர்கள்**

**Dr. G.V. பரத்வாஜ்**, M.B.B.S., M.S., அவர்கள்
General Surgeon - Medworld Pharmacy & Clinic

**Dr. A. ஆர்த்தி**, M.B.B.S., அவர்கள்
General Physician - Medworld Pharmacy & Clinic

**Dr. U. மைதிலி**, M.D.S., அவர்கள்
OMR Dental Centre

**சிறப்பு அழைப்பாளர்கள்**

திரு. **அ. காதர் மொய்தீன்** அவர்கள்
மாநில பொருளாளர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

திரு. **R.R. சண்முகவேல்** அவர்கள்
மாநில கௌரவத் தலைவர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

திரு. **K. ரமேஷ்குமார்** அவர்கள்
மாநில கௌரவ செயலாளர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

திரு. **V. அருணாசலம்** அவர்கள்
மாநில துணை தலைவர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

திரு. **இராம.சுப்ரமணியன்** அவர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

திரு. **S.P. லோகநாதன்** அவர்கள்
மாநில பொதுக்குழு உறுப்பினர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

**முகாம் ஒருங்கிணைப்பு**

திரு. **S. ரமேஷ்** அவர்கள்
காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் - (த.ப.எ.ச)

திரு. **V. அபில்ராஜ்** அவர்கள்
காஞ்சிபுரம் மாவட்ட துணை தலைவர் (த.ப.எ.ச)

திரு. **H. சிவராமன்** அவர்கள்
காஞ்சிபுரம் மாவட்ட துணை செயலாளர் - (த.ப.எ.ச)

திரு. **K. மணிவண்ணன்** அவர்கள்
காஞ்சிபுரம் மாவட்ட புகைப்படக் கலைஞர் - (த.ப.எ.ச)

திரு. **V. சங்கர்** அவர்கள்
காஞ்சிபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - (த.ப.எ.ச)

திரு. **D. ரவி**, B.Com., அவர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர் - (த.ப.எ.ச)

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# PMR'S

## "MALLI" Luxury Villa

@

## Nedungundram, East Tambaram






**OTHER PROJECTS - UNDER CONSTRUCTION**

1. Flat at - Puzhal - MGR Nagar, Cycle Shop
2. Flat at - Kathirvedu - Sathyamoorthy Nagar, Vinayagapuram

# PMR HOMES & DEVELOPERS

No. 600-A, 15-A, Basement, Gemini Parsn Complex, Anna Salai, Chennai - 600 006.

**Ph. : 044 - 48527153 Mobile : 9080326627**

**Email : sree@pmrhomes.in web. www.pmrhome.in**